தெணியான்

இரு
உலகங்கள்

இரு
தத்துவங்கள்

மேலைய பிரச்சாரத்தின் உண்மைச் சொரூபம்

தெணியான்

தெணியான்

தெணியகம்
பொலிகண்டி
வல்வெட்டித்துறை

மேலைய பிரச்சாரத்தின் உண்மைச் சொரூபம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக்
குடியரசின் சோவியத் ஸ்தானிகராலயத்தின்
தகவற் துறையினரால் வெளியிடப்பட்டது.

அச்சகம்
பிரகதி அச்சகம்,
93, மாளிகாகந்த ரோட்,
கொழும்பு-10.

உள்ளடக்கம்

ஆசிரியர்களிடமிருந்து 05

முன்னுரைக்குப் பதிலாக 06

பயிற்சி 1

உலக அரங்கில் சோவியத் யூனியன் 07

பயிற்சி இரண்டு

உழைப்பு, திட்டமிட்ட பொருளாதாரம்,
சோஷலிசச் சொத்துடைமை 29

பயிற்சி மூன்று

சோவியத் வாழ்க்கை முறை 58

ஆசிரியர்களிடமிருந்து

மேலைய பத்திரிகைகளை மேலோட்டமாக வாசித்தாலே அவை சோவியத் யூனியன், அதன் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் வாழ்க்கை முறை பற்றி பிரசுரிக்கப்படுகின்ற ஏராளமான விஷயங்கள் பெரும்பாலும் உண்மைக்கு மாறானவை என்பதைக் காட்டுகின்றன.

வெகுஜனத் தகவல் சாதனங்களுக்காகப் பணிபுரிவோர் அறியாமையால் தவறாக வழிநடத்தப்படுகிறார்களா அல்லது வேண்டுமென்றே தவறான தகவல்களைத் தர முயற்சிக்கிறார்களா? இக்கேள்விக்குப் பதில்காண நாம் முயலவில்லை. எமக்குக் கிடைத்துள்ள விஷயக் கடலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பல அறிக்கைகளை நாம் சாதாரணமாக எடுத்துக் கொண்டு இந்த அறிக்கைகள் எவ்வளவு தூரம் உண்மைக்குப் புறம்பானவையாய் உள்ளன என்பதை காரணங்கள் மூலம் காட்ட முயற்சித்தோம்.

மாஸ்கோவின் உட்பகுதிகளில் பசி கொண்ட கரடிகள் அலைந்து திரிவது, மணப்பெண்களைப் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பது, ஒரு ரூபிளுக்காக படைவீரர்கள் ஒருவரையொருவர் கொல்வது (பாரிஸ்-மெட்ச் 26, பெப்ருவரி 1976 ப-3) போன்ற கதைகளையும் பிற பொருளற்ற அறிக்கைகளையும் மேலீடான மூளையற்றவை என்று கருதி நாம் கவலை கொள்ளவில்லை; இவற்றை, ஆரம்பப் பள்ளி மாணவர்கள் கூட நம்பவில்லை என நாம் நம்புகிறோம்.

உண்மை எது, பொய் எது, உண்மைகளைப் புரட்டுவது யாருக்குத் தேவை என்பதில் தீர்மானம் எடுக்கும் ஆற்றலுள்ள ஓர் ஸ்தூலமான வாசகருக்காக இந்நூல் வரையப் பெற்றுள்ளது. எமது உப தலைப்புகள்—''ஒப்பீட்டு சோவியத்திய''வில் பயிற்சிகள்—மேலைய பத்திரிகைகளில் அடிக்கடி பயன்படுத்தப்படும் பதப்பயனீட்டியலை அடிப்படையாகக் கொண்டவை இச் சிறு நூல் வாசகர், விஷயங்களில் தன்னைச் சரிசெய்து கொள்ள உதவும் என்று நாம் நம்புகிறோம்.

முன்னுரைக்குப் பதிலாக

> "இந்தத் தஸ்தாவேஜுவை முழுமையாகப் பிரசுரிக்க கிரெம்ளின் விரும்பவில்லை...இந்த ஒப்பந்தங்களை மேற்கோள் காட்டும் எவரும் சிறையிலடைக்கப்படுவார். இந்தச் செயல்களைத் தடுக்க மேலைய வல்லரசுகளிடம் ஸ்தூலமான வழிவகைகள் எதுவும் கிடையாது."
>
> விக்தர் சோர்ஸா பிரெஞ்சு சஞ்சிகையான பாரிஸ் மேட்ச்சில் எழுதுகையில் 9, ஆகஸ்ட் 1975 பாரிஸ்

சம்பந்தப்பட்ட இந்தத் தஸ்தாவேஜு ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மகாநாட்டின் இறுதித் தாக்கீது ஆகும். ஆகஸ்ட் 2, 1975ல், அதாவது பாரிஸ் மெடச் அச்சுக்குப் போகுமுன்னர், பிராவ்தா (சோ.க.க. மத்தியக் கமிட்டியின் பத்திரிகை), இஸ்வெஸ்தியா (சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் பத்திரிகை) துருத் (தொழிற்சங்கங்களின் அகில யூனியன் மத்தியக் கவுன்ஸிலின் பத்திரிகை) போன்ற மிகப் பெரும் சோவியத் பத்திரிகைகளில் இது முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டது, இந்த மூன்று சோவியத் முன்னணிப் பத்திரிகைகளில் ஹெல்ஸிங்கி உடன்பாடுகள் பிரசுரமானது மாத்திரம் மூன்று கோடி பிரதிகளில் இத்தாக்கீதின் விநியோகத்தை உறுதி செய்தது. சில நாட்களுக்குப் பின்னர் இந்த இறுதித் தாக்கீது சோவியத் யூனியனில் தனியாக நூல் வடிவில் பிரசுரிக்கப்பட்டது. அதேபொழுதில், பெரும்பாலான மேலை நாடுகள் இந்தத் தாக்கீதைத் தமது அதிகாரபூர்வ அரசாங்க செய்திக் கடிதங்களில் மாத்திரம் பிரசுரித்தன; அவற்றின் குறைந்த விநியோகம் காரணமாக பரந்த வெகுஜனத்தினர் அதைப் படிக்கவில்லை.

பயிற்சி-1

உலக அரங்கில் சோவியத் யூனியன்

> சமீப ஆண்டுகளில் மேலைய பத்திரிகைகள் (பத்திரிகைகளின் பெயர்களைக் குறிப்பிடுவது அதிக இடத்தைப் பிடிக்கும்):
>
> 1 சோவியத் யூனியன் தனது போர் ஆற்றலை நாட்டின் பந்தோபஸ்துத் தேவைகளுக்கு அதிகமாகப் பெருக்கியும் முழு நிறைவாக்கியும் வருகிறது என்றும்:
>
> 2 சோவியத் யூனியனும் அதன் ஐரோப்பிய நேச அணிகளும் நேட்டோ படைகளின் மீது ஓர் இராணுவ மேல்நிலையை எல்லாக் காலங்களிலும் அதிகரித்து வருகின்றன என்றும் தொடர்ந்து கூறிவருகின்றன.

சோ.க.க மத்தியக் கமிட்டி பொதுச் செயலாளரும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் தலைவருமான லியோனிட் பிரெஷ்னேவ் (மேற்கு ஜெர்மன் வோர்வாட்ஸ் சஞ்சிகைக்கு மே, 1978ல் அளித்த பேட்டியொன்றில்) இந்தக் கூற்றுக்கள் பற்றி கருத்து தெரிவிக்கையில் சொன்னார்:

''...சோவியத் யூனியன் இப்போதைக்குப் பல ஆண்டுகளாக மத்திய ஐரோப்பாவில், தற்போது

வியன்னாவில் எப்பகுதி குறித்து பேச்சுக்கள் நடை பெறுகிறதோ அப்பகுதியில், தனது ஆயுதப் படை களைக் கட்டியெழுப்பியதோ, அதிகரித்ததோ கிடையாது. இன்னும் மேலாய், இப்பேச்சுக்களின் போது, வியன்னா பேச்சுக்கள் நடைபெறுகின்ற காலம் முழுவதிலும் தமது படைகளையும் படைக் கலங்களையும் பெருக்குவதில்லை என்ற கட்டுப்பாட்டை இரு பக்கத்தாரும் ஏற்கவேண்டுமென மேலைய தரப்பினருக்கு நாமும் எமது நேச அணிகளும் தொடர்ந்து ஆலோசனை கூறிவருகிறோம்; மேலை நாடுகள் எமது ஆலோசனையை ஏற்காதிருப்பது வருந்தத்தக்கதே; அதே சமயம் அவை எடுத் துள்ள நடைமுறை நடவடிக்கைகள் எதிர்த்திசை யில் உள்ளன.

''வியன்னாவில் நடைபெறும் அதே பேச்சுக் களில் 'மேநிலை' சம்பந்தமாக, 'மேநிலை' அல்லது 'அளவின்மை' நிலவவில்லை என்பதைத் தெளி வாகக் காட்டும் அதிகாரபூர்வ புள்ளிவிபரங்களைத் தரப்புக்கள் பரிமாறிக் கொண்டன. மேலை நாடு களும் வார்ஸா ஒப்பந்த நாடுகளும் மத்திய ஐரோப் பாவில் சம எண்ணிக்கையுள்ள துருப்புக்களை— ஒவ்வொரு தரப்பும் 980,000 வீரர்களுக்கும் சிறிது அதிகமான தொகையினரைக்—கொண்டுள்ளன,

''......தமது அபிப்ராயப்படி மேலை நாடுகள் படைக்கலங்களில் ஒரு தரரீதியான மேநிலையைக் கொண்டுள்ளதாக மேலைய இராணுவ, அரசியல் தலைவர்கள் அடிக்கடி கோரி வருகின்றனர். 'கிழக் கிலிருந்து வரும் அச்சுறுத்தல்' பற்றிய அதே வட் டாரங்களின் கற்பனையான கூற்றுக்களில் தர்க்கம் எங்கே உள்ளது என ஒருவர் கேட்கலாம்.

''இரு இராணுவ—அரசியல் குழுக்களின் மிகப் பெரிய வல்லரசு உறுப்பினர்களுக்கும்—சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும்—இடையேயான சக்திகளின் உலகரீதியான பரஸ்பர உறவைப் பொறுத்த வரையில் இருதரப்புகளாலும் அதிகார

பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதைப் போல், ஒரு தோராயமான சமநிலை, அதாவது, கேந்திர சக்திகளின் சமநிலை உருப்பெற்றுள்ளது, பேணிக் காக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக இந்த சமநிலை தான் 1962 ல் செய்து கொள்ளப்பட்ட சோவியத்—அமெரிக்க கேந்திரத் தாக்குதல் ஆயுதக் கட்டுப் பாட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், இப் போது வகுக்கப்பட்டு வரும் ஒப்பந்தத்தின் அடிப் படையிலும் தங்கியுள்ளது.

''சோவியத் ஆயுதப் படைகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை பலம், ஆக்கிரமிப்பாளன் கிழக்கிலிரு ந்தோ அல்லது மேற்கிலிருந்தோ, எங்கிருந்து வந் தாலும் சரி அவசியம் நேர்கையில் பதிலடி கொடுப் பதற்குப் போதுமானதாயினும் கூட, அது மேற் கிற்கு எந்தவிதமான ''இராணுவ அச்சுறுத்த''லை யும் விடுக்கவில்லை. தற் செயலாக இதை அமெரிக் கப் பத்திரிகைகள் உட்பட பாரபட்சமற்ற அவ தானிகள் நன்குகப் புரிந்து கொண்டுள்ளன, ஏற்றுக் கொண்டுள்ளன என்பதை நான் கூற முடியும்.

''சோவியத் யூனியன் உண்மையிலேயே வலி மைமிக்க நாடாகும். அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியாக அது வலிமையுடையது. ஆனல் சோவியத் யூனியன் ஒரு சமாதானபூர்வ நாடா கும். அதனது சமாதானத் தன்மை, எமது சமு தாயத்தின் இயல்பிலிருந்தே முகிழ்கிறது. எமது சமுதாயத்தின் தலையாய குறிக்கோளாக இருப்பது அதியுயர்ந்த அரசியல் உறுப்புக்களின் சட்டங்கள் தீர்மானங்களில் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள மக்களின் பொருளாதார நல்வாழ்வு மற்றும் கலா சாரத் தரங்களின் துரிதமான வளர்ச்சிக்குரிய அக் கறையாகும். எந்தவொரு கடமையையும் இராணுவ வழிகளின் மூலம் தீர்க்க நாம் எண்ணியதில்லை. இராணுவ சச்சரவைக் கொண்டு வரக்கூடிய பிர தேச அல்லது ஏனைய கோரிக்கைகளுக்காக நாம் மோதவேண்டிய அரசு எதுவுமே இல்லை.

இன்னும் மேலாக, சோவியத் மக்கள் எமது காலங்களில் போர் எப்படி இருக்கும் என்பதை தமது சொந்த அனுபவத்திலிருந்து நன்கு அறிவர், நினைவிற் கொண்டுள்ளனர்... மேற்கு ஐரோப்பாவைக் ''கைப்பற்றுவதற்கு'' சோவியத் யூனியன் தயார் செய்யவும் இல்லை. மேலும் எமது தளபதிகள் ''ஆங்கிலக் கால்வாய்க்குச்'' செல்லும் ஒரு திட்டத்தை வகுக்கவில்லை. சோவியத் இராணுவக் கட்டமைப்பின் வளர்ச்சி நாட்டின் பந்தோபஸ்துத் தேவைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. சோவியத் யூனியனின் மெய்யான எண்ணங்கள் அதிகாரபூர்வ கட்சி, அரசுத் தாக்கீதுகளில் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை, சோவியத் மக்கள் வாழ்கின்ற, கல்வி புகட்டப்படுகின்ற தார்மீக, அரசியல் சூழ்நிலை முழுவதன் மூலமும் அனுமானிக்கமுடியும். இராணுவவாத பிரசாரம் போருக்கான ஆயத்தங்களைக் கோருகிறது. அவநம்பிக்கையையும் ஏனைய நாடுகள் பால் பகைமையையும் தூண்டுவது இந்தச் சூழ் நிலைக்கு விரோதமானதாகும்.

''......யுத்த பிற்கால வரலாற்றுடன் பரிச்சயமுள்ள எவரும் 'செயல்—எதிர்ச்செயல்' கோட்பாட்டுக்கு ஏற்பவே ஆயுதப் போட்டி வளர்ந்தது என்பதை நினைவுபடுத்துவர்: மேற்குலகம் சவாலை விடுத்தபோது சோவியத் யூனியன் அச்சவாலை ஏற்க வேண்டியிருந்தது. எமது காலங்களில் முதலாவது அணுகுண்டு வீசப்பட்டது முதற் கொண்டு இவ்வாறே இருந்துள்ளது. ஆயுதப் போட்டியில் ஒவ்வொரு புதிய சுற்றின் தொடக்கமும் வேறுபடா வண்ணம் ஒரு ''சோவியத் அச்சுறுத்தல்'' பற்றிய புதிய கூச்சலுடன் இணைந்தே வந்தது.

''......நாமல்ல, ஆனால் அமெரிக்காதான் குண்டு வீச்சு விமானங்கள், நீர்மூழ்கிகள். அணு மற்றும் பிற நீண்டதூர ஆயுதங்களோடு டஜன் கணக்கான இராணுவத் தளங்களை அமைத்துவருகிறது. இத் தளங்கள் சோவியத் ஒன்றியத்தினதும் தெற்கு, வடக்கு மேற்கு, கிழக்கிலுள்ள அதன் நேச அணி

களினதும் எல்லைகளுடாக அச்சுறுத்தும் சங்கிலித் தொடராக நீண்டுள்ளன. சோவியத் யூனியனின் புரிந்து கொள்ளத்தக்க பந்தோபஸ்து நடவடிக்கை கள் தொடர்பாக ஆதாரமற்ற அச்சங்களையும் வெறி கூச்சலையும் விதைப்பவர்களுக்கும், இந்தக் கிலியை நம்புபவர்களுக்கும் ஆகக்குறைந்தது ஒரு குறுகிய காலத்திற்காவது சோவியத் மக்களின் இடத்தில் தாம் இருப்பதாகக் கற்பிதம் செய்து பார்க்குமாறு ஆலோசனை கூற விரும்புகிறேன். எமது நாடு இந்தக் தளங்களால் பல தஸாப்தங்களாகச் சுற்றிச் சூழப் பட்டிருக்கிறது. அத்தகைய ஒரு நிலைமையில் இந்த நரம்புக் கோளாறுள்ள கனவான்கள் என்ன கூறு வார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது ஆர்வந் தருவதாகும்.

''மத்திய ஐரோப்பாவில் தரப்புக்களின் படை களையும் படைக்கலங்களையும் 5,10,20 சதவீதத்தா லும் நீங்கள் விரும்பினால் 50 சதவீதத்தாலும் குறை ப்பது பற்றி வியன்னாவில் ஓர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திட நாம் எக்கணத்திலும் தயாராக இருக்கி றோம். ஆனால், இருந்து வரும் சக்திகளின் சம நிலையைக் குலைக்காத விதத்தில், ஒரு தரப்புக்கு இலாபமும் மறுதரப்புக்கு நட்டமும் இல்லாமல் இருக்கும் வண்ணம் இதை நேர்மையுடன் செய் வோமாக. எதார்த்தமானதும் இருதரப்புகளுக்கும் ஏற்புடையதுமான அத்தகைய நடவடிக்கைகளை இப்போதே மேற்கொள்வோம்; ஒரு தலைப்பட்ச மாக ராணுவ அனுகூலங்களைப் பெறுவதற்கு பேச்சுக் களைப் பயன்படுத்த முயலாமல் இருப்போம்.''

மாஸ்கோவில் இருந்த ஏ. பி. நிருபர் ஜோர்ஜ் கிரிம்ஸ்கிய் சட்ட விரோத நாணய மோசடிக்காகப் பிடிபட்ட போது, சி.ஐ.ஏ.யுடனான அவரது தொடர்புகள் அம்பலப் படுத்தப்பட்டபோது சி.ஐ.ஏ. எது வித கருத்தையும் தெரிவிக்கவில்லை: அதே சமயம், அவர் ''தகவல் அளிப் போருடன்'' நடத்திய சந்திப்புகளும்

அவர்களின் சேவைகளுக்கான கொடுப்பனவும் பொதுவான பத்திரிகை நடைமுறையாக விருந்தன என்று ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கிரிம்ஸ்கியின் ஆதரவாளர்கள் கூறியுள்ளனர்.

திரு. கிரிம்ஸ்கீயின் நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் ''பொதுவானது'' என்பதை வாசகர்களே அனுமானிக்க முடியும். தகவல் தருவோர் என அழைக்கப்படுபவருடன் அவர் நடத்திய கள்ளத்தனமான சந்திப்புகளும்—மாஸ்கோவின் ஒளிமங்கிய தெருக்களில் இவை நடைபெற்றன—நவீன உளவுக் கருவிகள் மற்றும் தொலைத் தொடர்புக்கான சக்திவாய்ந்த கருவிகள் போன்றவற்றோடு சோவியத் பிரஜையொருவரை அமர்த்தியமையும் இதில் அடங்கும். திரு. கிரிம்ஸ்கீய் தான் 'ஜோன்' என்று புனைப்பெயர் சூட்டிய ''தகவலாளர்'' ஒருவருடன் சந்திப்புகளை எவ்வாறு ஏற்படுத்தினர் என்பது பற்றிய குறிப்பு இதோ: இவருக்கு 1,500 ரூபிள் பெறுமதி வாய்ந்த பரிசை வழங்க அவர் உறுதியளித்தார்:

''திங்கட்கிழமை என்னுடன் தொடர்பு கொள்ளவும்—2437015, அலுவலகம்—2811533, நாம் நேரத்தை நிர்ணயிப்போம். ஒரு நாள் முன்பதாக. ஒரு மணிநேரம் முன்னதாக. புதன்கிழமை பி. ப. 4 மணி என்றால் அது வியாழக்கிழமை பி. ப. 3 மணி என்று பொருள்.''

சோவியத் செய்தித்தாளான ''லிட்டரேச்சர்னைய காஸியதா'' இக் குறிப்பின் படப்பிரதியைப் பின்வரும் தலைப்போடு பிரசுரித்தது: ''உங்களின் கையெழுத்தை உங்களால் அடையாளம் காண முடிகிறதா திரு. கிரென்ஸ்கீய்?''

ஹம்பர்க் செய்தித்தாளான பில்ட் செய்துங் ஒரு சோவியத் 'உளவு'க் கப்பல் இவான மொஸ்க்வின் அங்குள்ள துறைமுகத்தில்

காணப்பட்டதாக அறிவித்தது. இக் கப்பல் ஹம்பர்க்கில் மாத்திரமன்றி மேற்கு ஜெர்மனியின் வட பகுதி முழுவதிலும் வானொலித் தொடர்புக்கு இடையூறு விளைக்கும் சமிக்கைகளின் அனுப்பியது என்று கூறியது. இச் சமிக்கைகளின் நோக்கம் பண்டேஸ்வர் விமானத்திற்கு இடையேயான ரேடியோ தொடர்பைச் சீர்குலைப்பதாகும் என்று அது குற்றஞ் சாட்டியது, மேலும் கப்பலுக்குள் நுழைய நேர்ந்த பொலிஸார் ரேடியோ அறையிலிருந்து அத்தகைய சமிக்கைகளை சோவியத் அலுவலர் ஒருவர் அனுப்புவதைக் கண்டுபிடித்தனர் என்றும் அறிவித்தது.

ஹம்பர்க நகர்சபை பேச்சாளர் ஒருவர் டாஸ் நிருபருக்கு பதிலளிக்கையில், இவான் மொஸ்க்வின் கப்பலால் வானொலிக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல் மேற் கொள்ளப்படவில்லை என்று தெரிவித்தார். இத்தலையீடு சிங்கப்பூரைச் சேர்ந்த பொதிக் கப்பலால் தவருக அனுப்பப்பட்ட சமிக்கையேயாகும் என்று பொலிஸார் நிலைநிறுத்தியுள்ளதாக அவர்சொன்ஞர். பிழையான தகவலையேதாம்அச்சிடுகின்றனர் என்பதுபில்டின்ஆசிரியர்களுக்குத்தெரியும் என்பதும் அதை நிறுத்தாமல் மேற் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ''உணர்ச்சி'' களுக்கு முன்னர் வானொலிக் குறுக்கீட்டிற்கான காரணம் நிலைநிறுத்தப்பட்டுவிட்டது, அது சிங்கப்பூர் கப்பலால் ஏற்பட்டது என்று கூறுகின்ற அறிக்கையை மேற்கு ஜெர்மன் செய்தி நிறுவனமான டிபிஏ யிடமிருந்து இப்பத்திரிகை பெற்றது.

1977. குளிர்காலத்தில் மேற்கு ஜெர்மன் சஞ்சிகையான ஸ்டெர்ன் சோவியத் பரிசோதனைக் கூடங்கள் சளிச் சுரத்தை ஏற்படுத்தக் கூடிய

புதிய வகையபன நுண்ம நஞ்சினைக் கண்டுபிடித்துள்ளனர் என்றும் இது பரிசோதனைக் குழாய்களிலிருந்து வெளியேறி ருஷ்யர்களின் மற்று மோர் ஆயுதமாக உலகத்தின் குறுக்கே வெற்றி நடையை ஆரம் பித்துள்ளது என்றும் அறிவித்தது.

சோவியத் மருத்துவ விஞ்ஞானங்கள் பேரவை யின் உறுப்பினரும் நுண்ம நஞ்சியல் கழகத்தின் இயக்குநருமான விக்தர் ஸாதனேவ் ஸ்டெர்ன் செய்தியை கேலிக்கூத்து என்று வர்ணித்தார். இது வரையில் இந்த நுண்ம நஞ்சினைக் கண்டுபிடிப்பதி லும் இனங்காண்பதிலும் சோவியத் விஞ்ஞானி களே முதலானவர்கள் என்பதால் இந்த "ஆயுத"த்தை விருத்திப்பதில் அவர்கள் சம்பந்தப்பட்ட னர். தமது வெற்றி குறித்து உலக சுகாதார ஸ்தாபனத்திற்குத்தக்க முறையில் அறிவித்த அவர் கள் ஆர்வமுள்ள எல்லா நாடுகளுக்கும் இந்த நுண்ம நச்சுப் பொருளின் மாதிரிகளை அனுப்பியுள் ளனர். உ.சு. ஸ்தாபனத்தால் 1978 ஜனவரியிலும் மார்ச்சிலும் நடத்தப்பட்ட இரு சர்வதேச கருத் தரங்கில் ஏ1-77 (ஸ்டெர்ன் குறிப்பிட்ட வகை) நுண்ம நச்சு பற்றி விவாதித்த பெரும்பாலான நிபுணர்கள் மக்களையும் மிருகங்களையும் பாதித்து வந்ததாகக் காணப்படும் இரு வகைகளின் மறு இணையே என்பதை ஒப்புக்கொண்டனர். 1977ல் உ.சு. ஸ்தாபனம் விடுத்த செய்தி அறிக்கையின் படி ஏ1-77 வைரஸால் ஏற்படும் சளிச்சுர தொற்று நோய் சீனுவில்தான் தோன்றியது; பின்னர் ஹொங்காங்கிற்கும் சோவியத் ஒன்றியம் உட்பட பிற நாடுகளுக்கும் பரவியது.

1976, ஜூன் 1ல் போயிங் ஏரோ ஸ்பேஸ் கம்பனியின் துணையதிபர் ஒலிவர் கிளார்க்கின் உரையை வைட்டல் ஸ்பீச்சஸ் செய்தி இதழ் வெளியிட்டது. சோவியத் சிவில் பாதுகாப்புத் திட்டம் சக்திகளின்

கேந்திர வலுவைக் குலைக்கும் அச் சுறுத்தல் விடுகின்றது என்று அவர் கோரினுர்...இந்த வேலைத் திட்டம் அமுல் செய்யப்பட்டால், குறிப் பிட்ட அளவுக்கே துன்புற்று ஒரு ''பழிவாங்கும் தாக்குதலைத் தொடு க்கும் வலிமையை ருஷ்யா பெறக் கூடும் என்ருர் அவர்.

போயிங் துணையதிபரின் குறிப்பு களை அமெரிக்க ஜெனரல்களும் நேட்டோ பத்திரிகைகளும் எதி ரொலித்தன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை அமைப்பு களின் கட்டுப்பாடு பற்றிய ஒப்பந் தம் ஒப்பமிடப்பட்டதன் பின்னர், அதாவது, 1972 நடுப்பகுதியில், சோவியத் யூனியன் தனது சிவில் பாதுகாப்பு முயற்சிகளைப் பெருமள வுக்கு உள்ளியல்பாக்கியது என்று வலியுறுத்தினர். இதன் விளைவால் இவ் ஒப்பந்தம் பூரணமாகப் பய னற்றதாக்கப்பட்டது.

''அணு நிர்ப்பந்தத்தின் ஒரு சாதனமாக சோவியத் யூனியன் விரிவான சிவில் பாதுகாப்பு அமைப் பைப் பாவிக்கலாம் என்று அவர் கள் கூறுகின்றனர்.''

இந்தக் கூற்றுக்களுக்கான பதிலை, சமஷ்டி ஜெர்மனுக்கு 1978 மே மாதம் மேற்கொண்ட விஜயத்தின்போது வோர்வார்ட்ஸ் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் லியோனிட் பிரெஷ்னேவ் கொடுத்தார்:

''...அது நம்பமுடியாததாகத் தோன்றலாம், ஆனல் அது உண்மையாகும். போர் ஏற்படுமா யின் அமைதியான மக்களைப் பாதுகாப்பதை உறுதி

செய்வதனைக் குறிக்கோளாகக் கொண்ட இந்த நடவடிக்கைகள் கூட, ''ஆக்கிரமிப்புத் தன்மையின் ஓர் அடையாளமாக'' சோவியத் விரோத அவதூறில் நிபுணர்கள் பயன்படுத்துகின்றனர். சோவியத் ஒன்றியம் ''முதல் தாக்கு'' தலுக்குத் தயாராகிவருகிறது; பதில் தாக்குதலிலிருந்து புகலிடம் பெற நம்புகிறது என்கின்றனர்.

''இவ்வாறு சகலதையும் தலைகீழாக மாற்றுவதற்கு நோய்க் குணரீதியில் உருமாற்று கற்பனைவளம் உண்மையில் ஒருவருக்கு வேண்டும்! எந்தவொரு சாதாரண நபரும் இத்தகைய கருத்துக்களை மெய்யிலேயே நம்புவாரா?

''எமக்குப் போர் வேண்டாம். நாம் ஒரு போருக்கு ஆயத்தம் செய்யவும் இல்லை. ஆனல், ஓர் ஆக்கிரமிப்பாளனின் செயலால் மக்கள் மத்தியில் எவ்வளவு அளப்பரிய நட்டம் ஏற்படும் என்பதை சோவியத் மக்கள் தமது அனுபவம் மூலம் நன்கறிவர். வலுவான, பேரழிவுமிக்க தாக்குதல் போன்றவற்றில் தமது தயார்நிலை குறித்து மறுதரப்பிடமிருந்து நாம் அடிக்கடி கேட்டு வருகிறோம்; ஆனல் பாதுகாப்புக்கான எந்த நடவடிக்கைகளையும் பற்றியல்ல. வெட்கமற்ற அவதூறு பொழிவோர் மாத்திரமே இதை எவருக்கும் எதிரான ஒரு தாக்குதலின் ஆயத்தமாகக் கருதமுடியும்.

''ஓர் அணுப்போரின் வாய்ப்புகளுக்கு சொரணையற்ற அளவுரீதியான அணுகுமுறை எமக்கு விரோதமானது. இந்த அணுகுமுறை சில நாடுகளில் பிரசித்தமானது; இங்கே சாதாரண மக்கள் மத்தியிலான ஒரு சில சதவீத நட்டங்கள் ''ஏற்புடையவை''யாகப் பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கின்றன. ஓர் உலக அணுப்போரில் கோளின் ஜனத்தொகையில் ''பத்து சதவீதத்தினர்'' மாத்திரமே அழிவர் என்றும், அவ்வளவு குரூரமானதாக இருக்காது, அது உலக முடிவாக இருக்காது என்றும் மேற்குலகில் கேட்கப்படுகின்ற ஹேஷ்யங்களால்

நாம் மகிழ்ச்சியடையவில்லை. இந்த ''பத்து சதவீதத்தினர்'' மத்தியில் எவரொருவரும், தனியொரு நபர் கூட வீழ்வதை நாம் விரும்பவில்லை.''

சோவியத் சஞ்சிகையான நியூ டைம்ஸுக்கு பெரிய பிரித்தானியா, கிளாஸ்கோவைச் சேர்ந்த ஹெரால்ட் பார்ஹாம் எழுதினர்.

''அணு ஆயுதங்கள் சமாதானத்தைப் பாதுகாப்பாக்கியுள்ள காரணத்தால் போரைப் பற்றி அஞ்சத் தேவையில்லை என்று பி.பி.ஸி. ஒலிபரப்பாளர் ஒருவர் கூறியதைக் கேட்டு நான் திகைப்படைந்தேன். முதல் பார்வையில் தோன்றுவதைப் போல் இந்த கருத்தமைப்பு புதிராக இருக்கலாமல்லவா?''

பி.பி.ஸி. அறிக்கையைப் பின்னோக்கிப் பார்த்தால் அது புரூக்ஸங்ஸ் கழக(அமெரிக்கா) ஆராய்ச்சியாளர்களின் முடிவும் 1977 அக்டோபர் 14ல் கிறிஸ்டியன் ஸயன்ஸ் மொனிட்டரில் அறிவிக்கப்பட்டதும் ஆகும்:

''சோவியத் இராணுவப் பெருக்கத்தின்பால் 1975 முதல் அமெரிக்காவின் வலுவான செயல்கள் வெற்றிகரமான ஆயுதக் கட்டுப்பாட்டுப் பேச்சுக்குரிய வாய்ப்புகளை அதிகரித்திருக்கக் கூடும்.''

இந்தக் கருத்தமைப்புகளை செய்தி விமர்சகர் விளாத்லென் குஷ்னெட் சோவ் விமர்சித்துள்ளார்.

மனித வரலாறு புதிர்கள் நிரம்பியது. அதிலொன்று நினைவுக் கெட்டாத காலம் முதல் மக்கள் போர் ஆயுதங்களைச் செய்வதில் ஈடுபட்டிருந்தனர் என்பதும். அதேசமயம் மேலும் வெல்லமுடியாத ஆயுதங்களின் தோற்றம் ஆயுதப் பெருக்க வெறி

யின் பால் மனித குலத்தின் கண்களைத் திறக்கும், போர்க் கோடரியை ஆழப்புதைக்க நிர்ப்பந்திக்கும் என்று அவர்கள் நம்பினர் டைனமைற்றைக் கண்டு பிடித்த அல்பிரட் நோபல் சர்வதேச சமாதான இயக்கத்தின் அமைப்பாளர்களுக்கு எழுதியதை நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும். ''எனது தொழிற்சாலைகள் உங்களது காங்கிரஸ்களை விட விரைவாக போரை முடித்துவிடும். இரண்டு இரா ணுவ வீரர்கள் ஒரு விநாடியில் ஒருவரையொருவர் அழிக்கக் கூடிய நாளில் எல்லா நாகரிகமுள்ள தேசங்களும் போரின் பயங்கரத்தில் பொறுப்பு கொண்டு தமது படைகளைக் கலைத்து விடும்.''

அல்பிரட் நோபலும் அவருக்கு முன்னிருந்த பலரைப் போல, பி,பி,ஸி விமர்சகர் மற்று புரூக் கிங்ஸ் கழக ஆராய்ச்சியாளர்களைப் போல உத்தர வாதமளிக்கப்பப்பட்ட பரஸ்பர அழிவு நிலைமை யில் தப்பித்திருக்க வழிகாணும் அனைவரையும் போல் பிழை யிட்டுவிட்டார்.

நவீன ஆயுதங்கள் போரை பொருளற்ற தாய், மூளையற்றதாய் தற்கொலைக் கொப்பான தாய் ஆக்குகிறது என்பதைக் கூறத் தேவையில்லை அரசியல் வெறியர்கள் மாத்திரமே தமது அரசி யல் நோக்கங்களைச் சாதிக்கும் ஒரு வழிவகை யாக அதை இனியும் கருத முடியும். இப் பொரு ளில், இருந்துவருவதும் விரிவாக அங்கீகரிக்கப் பட்டதுமான ஏவுகணை, அணு சமநிலை இரு அமை ப்புகளுக்கிடையே ஒரு நேரடி மோதலின் அபாயத் தைக் குறிக்கிறது. அணு நிர்ப்பந்தத்தின் வாய்ப்பை அது நீக்குவதனால் மாத்திரமே அவ் அபாயத்தை குறைக்கிறது. மேற்குலகம் அணு ஆயுதங்களில் ஏக போகம் கொண்டிருந்த குறுகிய காலத்தில் இப்பா தைக்குத் திரும்பியது. ஆனால் இந்த நிலைமையை உலக அரசியல் நம்பிக்கை கொள்ளக்கூடியதாகவும், மேலும் தன்னியல்பாகவே ஒரு பேரழிவுப் போரி லிருந்து மனித குலத்தை விடுவிக்கக்கூடியதாகவும் நாம் கருதமுடியாது.

அணு ஆயுதங்கள் ஹானியற்ற கண்காட்சிப் பொருட்களல்ல. அவை இடையறுத தயார்நிலையில் வைக்கப்படுகின்றன. மேலும் இராணுவத்—தொழில்துறை வட்டாரங்களுடன் இணைந்துள்ள வட்டாரங்களில் அவற்றைமேலும் அழிவுமிக்கதாக்க விரும்புவோரும் உள்ளனர். அணுப் பொத்தானை எப்போது அழுத்துவது என்பதைத் தீர்மானிப்பதில் அரசியல் வாதிகளைவிட தாமே சிறந்த நீதிவான்கள் என்று கருதும் நேட்டோ ஜெனரல்களைப் பற்றி கூறத் தேவையில்லை.

எனவே, அணுக் கோடரிக்கு எதிரான பாதுகாப்புக்கு ஓர் அரசியல் கேடயம் (வன்முறைப் பிரயோகமின்மை அணு தாக்குதலைத் தொடுப்பதில் முதலாவதாக இல்லா திருக்கும் கடப்பாடுபற்றிய சோவியத் யூனியனின் ஆலோசனைகள் போன்றவை) மாத்திரம் தேவையல்ல. அணுவாயுதப் பாவிப்பைத் தடுப்பது மாத்திரமன்றி அவை முற்றுக அழிப்பதும் இன்றியமையாதது. அப்போதுதான் தற்கொலை வெறியர் (அனுபவம் காட்டுவதைப் போல மிகவும் விரும்பத்தகாத இடங்களில இவை முகங்கொடுக்கின்றன) இக்கொடிய பொத்தானில் தன் விரலை வைக்காமலிருப்பதற்கு 100சதவீத உத்தரவாதம் இருக்கும்.

லண்டனில் உள்ள கேந்திர ஆய்வுக் கழக இயக்குநர் கிறிஸ்தோபர் பெர்ட்ரம் பி.பி.ஸி.க்கும் அளித்த பேட்டியில் சோவியத் ராணுவப் பெருக்கம் பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார். இது எதைக் குறிப்பிடுகிறது எனக்கேட்டபோது சர்வதேச உறவுகளில் செல்வாக் கூட்டுவதற்கு இராணுவ வழி வகைகளைத் தவிர வேறெதுவும் சோவியத் யூனியனிடம் இருக்கவில்லை: அப்படியிருக்க, அமெரிக்கா பொருளாதார,நீதி

கலாசார வழிகள் மூலம பல நாடு
கள் மீது வலிமைமிக்க செல்வாக்
கைச் செலுத்தியது....

திரு. பெர்ட்ரமின் கருத்துக்கள் உண்மைக்கு அப்பாற்பட்டவை என்பதைக் காண்பது கஷ்டமல்ல...... அமெரிக்கா தனது பொருளாதார, கலாசார செல்வாக்கைப் பாவிப்பதன் மூலம் சர்வதேச உறவுகளை நடத்திவருகிறது என அவர் வலியுறுத்துகிறார். பின்னர் ஏன் அது போர்க்கோலம் பூண்டிருக்கிறது. உலகிலேயே மிகப் பெரிய பட்ஜெட்டை ஏன் கொண்டிருக்கிறது? ஆயுதப் போட்டித் துறையிலும் வெகுஜனப் பேரழிவு ஆயுதங்களின் என்றுமில்லாத அளவு புதிய மேலும் ''செயலூாக்க'' மானவற்றின்விருத்தியிலும் உற்பத்தியிலும் அது இன்னும் முன்னணியில் இருப்பது ஏன்? அது தான் உலகில் மிகப்பெரிய ஆயுத வர்த்தகராகத் திகழ்கிறது; ஏனைய எல்லா நாடுகளையும் ஒன்றாகப் பார்த்தாலும் கூட அவற்றைவிட அதிகமானவற்றை விற்கிறது. எனவே திரு. பெர்ட்ரமின் தர்க்கம் ஆதாரமற்றதென்பதை நாங்கள் காணலாம்.

சோவியத் ஒன்றியம் அதன் படைக்கலங்களை மிகச் சரியான மட்டத்தில் பேணுவதற்குக் காரணம், சர்வதேச உறவுகளிலும் உலக நிகழ்விலும் ''செல்வாக்கை ஊட்ட அவற்றைப் பயன்படுத்துவதற்கு அது விரும்புவதால் அல்ல. அமெரிக்காவும் அதன் நேட்டோ அணிகளும் தொடங்கிய ஆயுதப் போட்டியினுலேயே அவ்வாறு செய்யும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளது.

எல்லாமாக சோவியத் யூனியனின் பொருளாதார 'பலஹீனம்' பற்றியதும், தனது இராணுவ ஆற்றலைப் பெருக்குவதன் மூலம் சரி செய்ய முயல்வதாகக் குறைகூறுவதுமான—திரு பெர்ட்ரமின் ஆய்வும் திருப்தியற்றது. லண்டன் கழக இயக்குதர் பாலைவனத் தீவில் வாழ்கிறார் என்றும், பொருளாதார வலிமையில் சோவியத் யூனியன் உலகில் இரண்டாவது—ஐரோப்பாவில் முதலாவது—இடத்தை வகிக்கிறது என்பதை அவர் எப்போதும் கேட்டதில்லை என்றும் ஒருவர் எண்ணக் கூடும்.

இன்னும் மேலாய், இந்தக் காரணிகளுடன் உலக நிகழ்வு மீதான வலிமைமிகு தத்துவார்த்த, அரசியல் செல்வாக்கு வழிகளையும்—இதை சோவியத் யூனியன் அறுபது ஆண்டுகட்கு முன்னர் அதன் ஆரம்ப நாட்களிலிருந்தே செலுத்தி வந்துள்ளது—சேர்க்க வேண்டும். முன்னைய காலனிகளின் இடத்தில் சுதந்திர நாடுகளின் தோற்றத்திற்கு கலோனியல் தேசங்களின் விடுதலைக்கான சோவியத் யூனியனின் போராட்டம் கணிசமான அளவுக்கு வாய்ப்பேற்படுத்திற்று என்பதில் ஐயமில்லை. சோவியத் யூனியனின் முன்முயற்சி பேரில், கலோனியல் நாடுகள், மக்களுக்கு சுதந்திரம் வழங்குவது பற்றிய, இனவெறி, இனவொதுக்கலைக் கண்டிப்பது பற்றிய தீர்மானங்களை ஐ.நா. சபை அங்கீகரித்தமை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்குப் பழியான மக்களையும், சுதந்திரத்திற்குப் போராடுவோரையும் பாதுகாப்பதில் சோவியத் யூனியனின் நடவடிக்கைகள், புதிதாகத் தோன்றிய நாடுகளுக்கு அதன் நடைமுறை (இராணுவ, பொருளாதார உதவி உட்பட) உதவி ஆகியன அவற்றிற்குப் பெரும் உதவியாயிருந்தது. இதுவே, சோவியத் யூனியன் வளர்முக நாடுகளுடன் செய்து கொண்டுள்ள எல்லா உடன்படிக்கைகள் ஒப்பந்தங்களின் அடியாதாரமாய் உள்ளது. இதன் விளைவால் சோவியத் அயல்துறைக் கொள்கை உலக நிகழ்வில் செல்வாக்கு செலுத்தும் ஒரு வலிமைமிகு சாதனமாய் இருக்கிறது.

தமது சமூக வளர்ச்சிப்பாதையைத் தெரிவதற்கு முகங்கொடுத்த புதிதாகத் தோன்றிய பல நாடுகள் முதலாளித்துவத்தை நிராகரித்து சோஷலிஸத்தைத் தேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அவற்றின் தெரிவில் செல்வாக்கு செலுத்தியது சோவியத் யூனியனின் இராணுவ ஆற்றல் அல்ல, ஆனால், சமூகப் பிரச்னைகளின் தீர்விலான அதன் அனுபவமே,

திரு பெட்ரம் உலகில் அமெரிக்க இராணுவத்தின் செல்வாக்கைக் குறிப்பிடாததற்கு நல்ல கார

ணம் இருந்தது. இல்லாவிட்டால், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளரை அது ஆயுதபாணியாக்கியமை, அதன் சமீபத்திய கேவலமான வியத்நாம் போர் போன்றவற்றை அவர் விவாதிக்க வேண்டி இருந்திருக்கும் ஆயினும், இது, திரு பெர்ட்ரமின் அரசியல் நோக்கங்களுக்குப் பொருந்தியிருக்காது.

> ''அத்திலாந்திக் வட்டாரங்கள் சோவியத் வர்த்தகக் கப்பல்களின் வியாபிதம் பற்றியும், அமெரிக்காவுக்கும் அதன் நேட்டோ அணிகளுக்கும் இதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் கவலை கொண்டுள்ளன...... தனது ஏகபோகத்தைப் பெறுவதற்காக சோவியத் ஒன்றியம் குறைந்த சுங்கக் கட்டணங்களை—கடற்பாதைக்கு ஏற்ப ஏற்கப்பட்டவற்றைவிட 25—50 சதவீதம் குறைவானதை—விதிக்கிறது. குறைந்த கட்டணத்தை அனுகூலமாக்கி அதன் மூலம் மேலை நாடுகளின் பங்கைக் குறைக்கும் சோவியத் யூனியன் அவற்றின் வர்த்தகம், விநியோகம் மீது கட்டுப்பாட்டைப் பெற முடியும்.''
>
> லோ லொயிட் அன்வர் சொய்ஸ்,
> பிரஸல்ஸ்,
> 22, அக்டோபர் 1976

விளக்கத்திற்காக, நொவோஸ்தி நிருபர் ஒருவர் சோவியத் வர்த்தகக் கப்பல் துறை அமைச்சின் வெளியுறவுகள் திணைக்களத் தலைவர் இகோர் அவெரினைப் பேட்டி கண்டார்.

''எமது வர்த்தகக் கப்பலின் முக்கிய கடமை நாட்டின் உள்நாட்டு போக்குவரத்து மற்றும் வெளிநாட்டு வர்த்தகத் தேவைகளைத் திருப்தி செய்வதாக இருந்துள்ளது; இருந்து வருகிறது'' ''என்றார்

இகோர் அவெரின்,'' இத்தேவைகள் அதிகரிக்க கப்பலின் தொன்னளவு அதிகரிப்பு அவசியமாகிறது. உண்மையில், முதலாளித்துவச் சந்தையின் இன்றைய ஸ்திரமற்ற நிலைமை சோவியத் வெளி வர்த்தகத்தின் வளர்ச்சி வீதத்திலும், மறைமுகமாக எமது வர்த்தகக் கப்பலின் செயல்பாட்டிலும் செல்வாக்கு செலுத்தவே செய்கிறது. சர்வதேச கடல் மார்க்க வர்த்தகத்தில் ஏற்ற, இறக்கங்கள் இருந்த போதிலும் கூட, சோவியத் போக்குவரத்துக் கப்பல்கள் அதில் தனது வழமையான பாத்திரத்தை வகிக்கின்றன. வழமையான பாதைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பொதிகளை விநியோகிப்பதில் தமது சேவைகளை வழங்குகின்றன.''

''சோவியத் வர்த்தகக் கப்பல்கள் சில எமது போட்டியாளர்களை விட சுங்கக் கட்டணங்களில் 10—20 சதவீதத்தைக் குறைவாக அறவிடுவது வாஸ்தவமே. எமது சொந்த வர்த்தக நலன்களுக்கு எதிராகச் செயல்படுவதாக இது ஏற்படுவதில்லை. துரதிருஷ்ட வசமாக, எமது கப்பல்களில் சில விநியோக வேகத்திலும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவையிலும்—சேவைத் தரம் என்று மரபாக அழைக்கப்படும். அனைத்திலும், உயர்ந்த உலகத் தரங்களைத் திருப்தி செய்வதில்லை. இந் நிலைமையில் எமது சுங்கக் கட்டணங்களை நாம் குறைக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் எம்மால் போட்டிக்கு ஈடுகொடுக்க முடியாது.

''குறைந்த சுங்கக் கட்டணங்களில் நியாயமான இலாபத்தைப் பேண எமக்கு உதவுவது, முதலாவதாக, சோவியத் பிரதேசத்தில் கப்பல் போக்குவரத்தால் கொடுக்கப்படும் சேவைக் கட்டணத்தின் ஸ்திரமான விலைகளே. மேலும், இது, ஒவ்வொரு ஒற்றைப் பயணத்தின் இயக்கச் செலவில் 60—70 சதவீதம் தொகைப்படுகிறது.

''நாம் சுங்கக் கட்டணங்களைப் பற்றிக் குறிப்பிட்டதால், துரதிருஷ்டவசமாக எமது போட்டியா

ளர்கள் இன்னும் பயன்படுத்தி வரும் சில நயவஞ்சகமான முறைகளை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சோவியத் யூனியனில் லஞ்சம், வாடகைப் பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுப்பது, முற்பட்ட திகதி குறிக்கப்பட்ட பொருட்கள் போன்ற சர்வதேசரீதியாக ஊழல் என அழைக்கப்படும் அனைத்தும் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். அத்தகைய ஊழல்கள் மேற்கிலே பகிரங்கமாக கண்டிக்கப்பட்ட போதிலும் கூட, அவற்றை எதிர்த்துப் போராட எந்தவித ஆழமுள்ள முஸ்தீபுகளின் அடையாளமும் தென்படவில்லை.

> பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்ஸில் சோவியத் ஒன்றியத்தினுடைய கொள்கையின் ஒரு பொருளாதார விசையாகி வருகிறது என்றும் சிஎம்இஏ நாடுகளின் ஒருங்கிணைப்புப் பிணைப்புகளிலிருந்து சோவியத் யூனியன் மாத்திரமே பயன்பெற இருக்கிறது என்றும் ஸ்விட்சர்லாந்து பத்திரிகையான.
>
> 24 ஹியதஸ் மார்ச், 13-14-1976)
>
> கோருகிறது.

1979க்கும் 1980க்கும் இடையில் சோவியத் ஒன்றியமும் பிற சோஷலிஸ நாடுகளும் 9000 கோடி ரூபிள்கள் மதிப்பிடப்பட்ட செலவில் 10 மிகப் பெரும் தொழில் துறைத் திட்டங்களை நிர்மாணிக்கவுள்ளன. இந்தத் திட்டங்கள் தொடங்கப்பட்டதும் சோஷலிஸ நாடுகள் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பைப் பெறுவதனைச் சாத்தியப்படுத்தும்.

இந்த அதிகரிப்பு சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளினதும் தேவைகளைத் திருப்தி செய்யப் போகிறது. வரும் ஐந்தாண்டு காலத்தில் சோவியத் விநியோகங்கள் காரணமாக சிஎம்இஏயின் ஐரோப்பிய உறுப்பினர்களுக்கு பிரதானமாக விசை, மூலப் பொருள் வளங்களின் மிக முக்கியமானவை வகை செய்யப்

படும். 1980ஆம் ஆண்டில் சிஎம்இஏயின் உறுப்பினர்கள் சகலரும் விஞ்ஞானம், தொழில்நுட்பத் துறையிலான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பிலிருந்து மாத்திரம் சுமார் 1000 கோடி ரூபிள்களைப் பெறவுள்ளனர் என்பதை உத்தேச மதிப்பீடுகள் காட்டுகின்றன.

சோஷலிஸ ஒருங்கிணைப்பு சோஷலிஸக் கூட்டமைப்பின் உழைக்கும் மக்களுக்கு ஒரு கனமான நிதிப்பளுவாக இருந்திருந்தால் அவர்களின் மெய் வருமானம் 1971க்கும் 1975க்கும் இடையில் 32.2 சதவீதமும் 1977ல் மேலும் 4சதவீதமும் உயர்ந்திருக்காது. மேலும் ஏழு பெரும் முதலாளித்துவ நாடுகளில் (அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஜெர்மன், பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, கனடா) மக்களின் மொத்த மெய் வருமானங்கள் சராசரியாக 1.3சதவீதம் குறைந்தது என்பதை ஒப்பீட்டிற்காகக் குறிப்பிட்டாக வேண்டும். 1975ல் மாத்திரமே அவை அமெரிக்காவில் 2.6 சதவீமும் சமஷ்டி ஜெர்மனியில் 1.5 சதவீதமும் வீழ்ச்சியடைந்தன.

எனவே, சுவிஸ் பத்திரிகை பழம் சோவியத்—விரோத பல்லவியைப் புதுப்பிக்கும் முஸ்தீபில் மோசமாகத் தோற்று விட்டது என்றே தோன்றுகிறது.

> சோவியத் யூனியன் "ரெட் கஸ்தர் பெய்ட்டர்களை" வேலை தேடி சோவியத் ஒன்றியத்திற்கு வந்ததாகக் கூறப்படும் பிற சோஷலிஸ நாடுகளின் தொழிலாளர்களை, ஈவிரக்கமின்றி சுரண்டியதாகக் கோரியது.
>
> 1976, வேனிற் காலத்தில் மேற்கு ஜெர்மன் சஞ்சிகையான டெர்ஸ்டெர்ன்

இக்கதை, ஓரன்பர்க் நகரிலிருந்து சோவியத் ஒன்றியத்தின் மேற்கு எல்லைக்கு 2750 கிலோ மீட்

டர் நீளமான வாயுப் பாதையை நிர்மாணிப்பது பற்றியது. இதில் ஏழு சோஷலிஸ நாடுகள் பங்கு கொள்கின்றன; இவை ஒவ்வொரு ஆண்டும் சோவியத் ஒன்றியத்திடமிருந்து 1550 கோடி கன மீட்டர் இயற்கை வாயுவைப் பெறவுள்ளன. இந்த நிர்மாணத் திட்டத்திற்கு விஜயஞ் செய்த நொவோஸ்தி நிருபர் எவெக்னி இசாயேவ் இந்த அம்சங்களைத் தருகிறார்:

பல்கேரியாவைச் சேர்ந்த நிர்மாணத் தொழிலாளி கிரில் போஷிலோவ் சொன்னார்: எமக்கு ஒரென்பர்கில் அளிக்கப்பட்ட வரவேற்பையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சியடைந்துள்ளோம். மேலும் சிறப்பான வேலையைச் செய்வது மூலம் இதற்குப் பதில் தருவதே எம்முடைய ஒரே விருப்பம். எம்மத்தியில் பல்வேறு தொழில் செய்வோர் உள்ளனர். நாம் வாயுத் தொழிலாளருக்கான குடியிருப்புக்களை அமைக்கிறோம்.''

செக் தொழிலாளியான ஜாரோஸ்லாவ் நோனைசப் பொறுத்த வரையில், ஒரன்பர்கிலிருந்து சோவியத் ஒன்றியத்தின் மேற்கெல்லைக்கு வாயுப் பாதை இடுவது, சோவியத் பிரதேசத்தில் அவர் நிர்மாணத்திற்கு உதவும் இரண்டாவது திட்டமாகும். நாம் பல அழுத்தப் பொறி நிலையங்களையும் தொழிலாளர்களின் தற்காலிக, நிரந்தரக் குடியிருப்புக்களையும் கட்டவிருக்கிறோம். சோவியத் தோழர்களுடனான எமது உறவுகள் மனப்பூர்வமானவை, காரியார்த்த பூர்வமானவை. பிரச்னைகள் எதுவும் இருப்பின் அவற்றை விரைவாகவும் திறமையுடனும் தீர்க்கிறோம். 1978 இலையுதிர் காலத்தில் ராட்சத வாயுப்பாதையைச் செயலில் விடும் ஒரே பொது இலக்கை நாம் கொண்டுள்ளோம். இந்த வாயுப்பாதை எனது நாட்டிற்கு விலைமதிக்கவொண்ணாதது.''

உக்ரேனிய சோ. சோ. கு. வின் வோரோசிலோவ் கிராடில் வாயுப் பாதையின் நோவோப்ஸ்கோவ் பகுதி நிர்மாணிகள் குழாயைக் கொண்டு

செல்லும் வாகனத்தின் போலந்து சாரதி வால்டிமார் குல் கோவ்ஸ்கியை ''எமது சிறந்த வேக மிக்க சாரதி'' என்று வர்ணிக்கின்றனர். ஒவ்வொரு தடவையும் திட்டத்திற்கு மேலாக 50 தொன்னுக்கு அதிகமான குழாய்களை அவர் நிர்மாணத் தளங்களுக்கு விநியோகிக்கிறார்.

''எம்மிடம் முதல் தரமான இயந்திரங்கள் உள்ளன' செக்கோஸ்லேவேக் டாட்ரஸ், சோவியத்தில் செய்யப்பட்ட ஸில்—130 எம்முடைய ஜெல்க்ஸ் ஆகியன எக்கால நிலையிலும் மிகச்சிறப்பாகச் செயல்படுகின்றன,'' என்றார் வால்டிமார்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பொருத்து வேலைக் குழு நீப்பர் நதியின் வலது கரையில் ஸ்வெட்லோவ்த்ஸ்க் நகரில் தலைமையகத்தை அமைத்துள்ளது. அவர்களில் ஒருவரை, நெருப்பின் நகரிலிருந்து வந்த ஹான்ஸ்—டியெட்டர் ரெய்னிக்கேயைப் பேட்டி கண்டேன். அப்போது தான் அவர் கடிதம் ஒன்றைப் பெற்றிருந்தார். சோவியத் ஒன்றியத்தில் அவர் எவ்வாறு இருக்கிறார் என அவரது மனைவி ரெஜினாவும் பெற்றோரும் ஐந்து குழந்தைகளும் கேட்டிருந்தனர்.

''உண்மையில் எல்லாம் எப்படி இருக்க வேண்டுமோ அவ்வாறே உள்ளது—நான் நன்றாக இருக்கிறேன் என்று அவர்களிடம் சொல்லப் போகிறேன். நான் எனது வேலையை விரும்புகிறேன். இங்கு வருமானமும் நன்றாக உள்ளது. எங்களுக்கு சிறப்பான உணவும், நல்ல உடையும் வசதி மிக்க வீடுகளும் உள்ளன. கடும் குளிர் இருந்த போதிலும் நான் தாமதித்ததே இல்லை. ஒரு தடவைக்கு நான் ஒன்றரை கோட்டாக்களைச் செய்தேன். இந்த வாயுப்பாதை நாளொன்றுக்கு 250-260 மீட்டர் நீண்டு வருகிறது.''

ஹங்கேரிய இயந்திரவியலாளர் இஸ்த்வான் மொல்னர் 30வயதே ஆனவராயினும் அவருக்கு பதினொரு ஆண்டு நிர்மாண அனுபவம் உண்டு.

தொழிலாளியாக வேலை ஆரம்பித்த அவர் தொழில் நுட்பப் பள்ளியில் படித்து பின்னர் ஒரு கழகத்திலிருந்து பட்டம் பெற்றார். ''வாயுப்பாதை அமைப்பதில் 20க்கும் அதிகமான ஹங்கேரிய நிறுவனங்கள் பங்கு கொண்டுள்ளன. திட்டம் பூரணமாகும் வரை எம்முடைய மூவாயிரம் தொழிலாளர்களும் நிபுணர்களும் பங்கெடுப்பர். குழுவேலை நெருங்கிய ஒத்துழைப்பைத் தருவதாக நான் உணர்கிறேன். எனது 200 தோழர்கள் ருஷ்யன் படிக்க விரும்புவதாகக் கூறியுள்ளனர்.'' என்றார் அவர்.

பயிற்சி - இரண்டு

உழைப்பு, திட்டமிட்ட பொருளாதாரம், சோஷலிஸச் சொத்துடைமை

> "அமெரிக்க வானொலி ஒலி பரப்புக்கள் அமெரிக்க, சோவியத் தொழிலாளரின் சம்பளங்களுக்கிடையே பெரும் வித்தியாசம் இருப்பதாக அடிக்கடி புள்ளி விபரங்களை மேற்கோள் காட்டுகின்றன, நடுத்தர அளவுள்ள கார் ஒன்றுக்கு தேர்ச்சி பெற்ற அமெரிக்கத் தொழிலாளியின் நான்கு அல்லது ஐந்து மாத சம்பளமே செலவாகிறது என்றும், அதே சமயம் சோவியத் தொழிலாளி 20 மாத சம்பளத்திற்கு அதிகமானவற்றைச் செலவிட வேண்டியுள்ளது என்றும் நான் மீண்டும் கேள்விப்பட்டேன். உண்மையில் இவ்வித்தியாசம் அவ்வளவு பெரியதா?"

ஜோகின் குட்டியாரெஸ்
சாவோ போலோ,
பிரேஸில்

சோவியத் யூனியனில் சம்பளங்கள் உலகிலேயே ஆக உயர்ந்தது அல்ல என்பது உண்மையே. உண்மையில் அவை அமெரிக்காவைவிட குறைவு. இதற்குப் பல காரணங்கள் உண்டு. எமது நாடு அதன் சோஷலிஸ வளர்ச்சியை (1917 புரட்சியின்

பின்னர்) மிகவும் தாழ்வான பொருளாதார மட்டத்திலிருந்து ஆரம்பித்தமை அதில் ஒன்று. அதன் பின்னர்கூட சோஷலிஸ பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டைகள் இருந்தன. உதாரணமாக, நாஜி ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு காரணமாக சோவியத் யூனியன் தனது தேசிய செல்வத்தில் மூன்றிலொன்றையும் 2 கோடி உயிர்களையும் இழந்தது.

ஆயினும், வோய்ஸ் ஓஃப் அமெரிக்கா எம்மை நம்பச் செய்ய விரும்புவதைப் போல சம்பளங்களுக்கிடையேயான வித்தியாசம் அவ்வளவு பெரியதா? பாரபட்சமான பிரசாரம் சாதாரண பிரிவினை முறையைக் கைக்கொள்கிறது. அமெரிக்கத் தொழிலாளி தனது தினசரி சம்பளத்தில் இத்தனை கோழிகள் அல்லது முட்டைகள் அல்லது ஆப்பிள்களை வாங்கமுடியும் என்று அல்லது ஒரு காரை வாங்க அவருக்கு இத்தனை மாத சம்பளங்கள் தேவை என்று கேள்விப்படுகிறோம். இது உண்மைதான். ஆனல், உண்மையில் அமெரிக்கத் தொழிலாளி காரின் விலையை தனது மாதாந்த சம்பளத்தொகை மூலம் பிரிக்கத் தொடங்கும் முன் அவர் சில கழித்தல்களைக் செய்யவேண்டியுள்ளது. வரிகள் (நேரடி வரி சம்பளத்தில் கால்வாசி), வாடகை, மின் மற்றும் பிறகட்டணங்கள் (சராசரியாக சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதி) உள்ளன. இதைவிட காப்புறுதிக் கொடுப்பனவுகள், குழந்தைகளின் கல்விச் செலவு, டாக்டர் செலவு போன்றவையும் உள்ளன. ஒரு விடுமுறைக்காக அல்லது "கஷ்ட காலத்திற்காக"—வேலையில்லாது போகும் சாத்தியப்பாட்டிற்கெதிராக — ஒதுக்கிவைக்க வேண்டியதைப் பற்றி பேசவே தேவையில்லை.

ஒரு தொழிலாளி இதன் பின்னரே ஒரு காரின் விலையை எஞ்சியுள்ள தனது சம்பளத்தைக் கொண்டு பிரிக்கத் தொடங்குகிறர். இதன் பெறுபேறு வோய்ஸ் ஓஃப் அமெரிக்காவின் கணக்கு தோன்றச் செய்வதைப் போல அவ்வளவு மகிழ்ச்சி

தருவதல்ல, சகல கழிப்புகளுக்கும் பின்னர் எஞ்சியிருக்கும் கூடியதொகை 40சதவீதமே இந்த அடிப்படையில்தான் ஒரு காருக்காக அமெரிக்கத் தொழிலாளி ஒருவர் எவ்வளவு காலம் வேலைசெய்ய வேண்டும் என்பதைக் கணிக்கமுடியும்.

மேற்சொன்ன சில செலவுகளை சோவியத் தொழிலாளியும் சந்திக்க வேண்டியிருப்பது உண்மையே. ஆனல் எல்லாவற்றையும் அல்ல. அமெரிக்கத் தொழிலாளிக்கு ஆகும் செலவில் ஒரு பகுதியே அவருக்குச் செலவாகிறது. உதாரணமாக எமது வரிகள் சம்பளத்தில் 8முதல் 13சதவீதமும் வாடகை 3-4 சதவீதமும் ஆகும். ஏனைய செலவுகளும் கணிசமான அளவு குறைந்தவையே. எமது சுரங்கப் பாதை அல்லது பஸ் கட்டணம் தூர வித்தியாசமின்றி 5 கொபேக்குள். ஆனல் அமெரிக்காவில், தூரத்திற்கேற்ப (செலாவணி வீதத்தில் மாற்றப்பட்ட) 30முதல் 40கொபேக்குகள் ஆகும், சோவியத் யூனியனில் சினிமா டிக்கட்டுகளின் விலை அமெரிக்காவை விட நான்கு தடவைகள் குறைவானது சோவியத் ஒன்றியத்தில் மருத்துவமனைப் பராமரிப்பு, மிகவும் சிக்கலான சத்திர சிகிச்சை உட்பட மருத்துவ சேவைகள் இலவசமே. தொழிற் சங்கங்கள் விடுமுறை இல்லங்கள், ஆரோக்கிய தலங்களில் தொழிலாளர்களுக்கு இலவசமாக அல்லது செலவில் 30 சத வீதத்திற்கு மேற்படாத கட்டணத்தில் இடவசதி அளிக்கின்றன. பெற்றோர்கள் தமது குழந்தைகளின் சிறுர், குழந்தை மனைகளுக்காகும் செலவில் சுமார் கால் வாசியை (மாதம் 10-20 ரூபிள்களை) கொடுக்கின்றனர். சோவியத் யூனியனில் ஆகக் குறைந்த மட்டம் முதல் பட்டப்படிப்புவரை கல்வி இலவசமே, மேலும் பெரும்பாலான கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் அரசு மான்யத்தைப் பெறுகின்றனர். சகல விதமான விளையாட்டு வசதிகளும் எந்தவித செலவுமின்றி எல்லோருக்கும் கிடைக்கின்றன.

இவை எல்லாவற்றையும் நீங்கள் கவனமாக எடைபோட்டால் சோவியத் யூனியனிலும் மேற்கி

லும் உள்ள தொழிலாளிகளின் சம்பளங்களுக்கிடையேயான 'பெருப்' வித்தியாசம் சோவியத் யூனியனுக்கு சார்பாக இருப்பதைக் காண்பீர்கள்.

> ''சோவியத் சம்பள முறை துல்லிதமற்றது. நியாயமற்றது, விதிக்கட்டுப்பாடற்றது. தேர்ச்சித் தரங்கள், உற்பத்திக் கோட்டாக்கள் மேல் மட்டத்திலிருந்து அனுப்பப்படுகின்றன. அவற்றிலிருந்து தொழிலாளர்கள் தம்மைப் பாதுகாக்க முடியாதிருப்பது ஒரு விதியாக இருக்கிறது.
>
> டை செல்ட்வோச்சே,
> செப்டெம்பர் 8,1976

''உற்பத்திக் கோட்டாக்களின் (கால் எல்லை) அறிமுகமும் திருத்தமும் சேவைத் தரங்களும் தொழிற்சாலை அல்லது அலுவலகத்தின் தொழிற்சங்கக் குழுவினுடனான ஒப்பந்தத்தோடு தொழிலகம். நிறுவனம் அல்லது ஸ்தாபனத்தின் நிர்வாகத்தால் மேற் கொள்ளப்படுகிறது'' (விதி 103, ருஷ் சமஷ்டியின் தொழிலாளர் சட்டம்) ஏனைய குடியரசுகளின் தொழிலாளர் சட்டங்களிலும்இதேபோன்ற விதிகள் உள்ளன.

சோவியத் யூனியனில் சம்பளம்,செய்யப்பட்ட வேலையின் அளவு, தரத்தின்மீதே சார்ந்துள்ளது. சோவியத் தொழிலாளி உண்மையில், தனது உற்பத்திக் கோட்டாவை அல்லது தேர்ச்சி தரத்தை நிலைநிறுத்துவதில்லை, வேறு எந்த நாட்டின் தொழிலாளர்களும் இதைச் செய்கிறார்களா என்பதும் ஐயமே. கோட்டாக்களையும் (மணி, தினசரி மற்றும் மாதாந்த) சம்பள வீதத்தை நிர்ணயிப்பதில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பங்குகொள்கின்றனர் இவை நாடு முழுமைக்கும் சட்டரீதியானதாய் ஒரே சீரானதாய் மேற் கொள்ளப்படுகின்றன.

விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்களால் அதாவது, புதிய இயந்திரம், உற்பத்தி நுட்பங்கள், சீரமைக்கப்பட்ட வேலை முறைகள் போன்றவற்றால் அவசியமாக்கப்பட்ட உற்பத்தி மாற்றங்கள் உற்பத்திக் கோட்டாக்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது: குறித்த ஒவ்வொரு விஷயத்திலும் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தின் அங்கீகரிப்பினால் மாத்திரமே புதிய கோட்டாக்கள் அறிமுகப்படுத்த முடியும். கூடிய அறிவாற்றல் உள்ள, தனது தொழிலில் தேர்ச்சியுள்ள, கூடிய வேலை செய்யும் ஆற்றலுள்ள ஒருவருக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்ற உண்மையில் உள்ள நீதி குறித்து எவரும் கேள்வி எழுப்புவது ஐயமானதே. சோவியத் யூனியனில் ஒவ்வொரு ஆண்டும் 150 அல்லது 160 இலட்சம் தொழிலாளர்கள் தமது தரங்களை மேம்படுத்துவதற்காகப் பாடத்திட்டங்களில் கலந்து கொள்கின்றனர். பலர் தமக்கு உயர்ந்த தேர்ச்சித் தரத்தையும், 10-15சதவீத சம்பள அதிகரிப்பையும் வழங்கும் பரீட்சையில் சித்தியடைய தாமாகவே பயிற்சி பெறுகின்றனர். நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு தராதரக் குழுவில் அனுபவமுள்ள தொழிலாளர்களும் உள்ளனர். இந்தக் குழுவின் அமர்வுகள் பகிரங்கமானது. இதில் விருப்பமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம்.

திட்டத்தின் மேலதிக நிறைவேற்றத்திற்காக சம்பள மிகை யூதியங்கள் அளிக்கப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் மிகை யூதியங்களின் அளவு இரட்டிப்பாகி இப்போது மாதாந்த சம்பளத்தில் சுமார் 17 சதவிதமாக உள்ளது. சம்பளம் சார்ந்திருக்கும் பிற காரணிகள் வேலை சம்பந்தப்பட்ட முயற்சி, பொறுப்பின் அளவு, வேலை நிலைமைகள், ஆகியன. உருக்கை உருக்குபவர் ஒரு குழாய் பழுது பார்ப்பவரைவிட அதிகமாகப் பெறுகிறார்; நகரம் விழிப்பதற்கு ஒரிரு மணித்தியாலங்களுக்கு முன்னர் தன் வேலை நாளைத் தொடங்கும் பஸ் சாரதி தையல் - இயந்திர இயக்குநரைவிட அதிகமாகப் பெறுகிறார்.

ஓராண்டுக்கு முன்னர் சுரங்கத் தொழிலாளிகளுக்கு வேலை வாரம் 30 மணியாகக் குறைக்கப்பட்டது; சம்பள விதங்கள் 10 சதவீத்தால் அதிகரிக்கப்பட்டன. சைபீரியா, தொலை வடக்கு மற்றும் சோவியத் ஒன்றிய தூர கிழக்கின் கஷ்டப் பிரதேசங்களில் வருமானம் நாட்டின் எஞ்சிய பகுதியைவிட இருமடங்கு அதிகமானதாகும்.

சோவியத் யூனியனில் சம்பள அதிகரிப்பானது அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டுள்ள ஒரு துரிதமான நிகழ்வுப் போக்காகும் மக்களின் சம்பளங்கள் மற்றும் பொதுப் பயனீட்டு நிதியால் வகை செய்யப்பட்ட சேவைகளைக் கொண்ட மெய் வருமானங்கள் ஒவ்வொரு 15 ஆண்டுகளுக்கும் இரட்டிபாகிறது. டை வெல்ட்வோச்சே இதிலிருந்துதான் சோவியத் தொழிலாளரைப் பாதுகாக்க ஆலோசனை கூறுகிறது.

> 1978 ஜனவரி பிற்பகுதியில்பாரிஸ் செய்தித்தாளான எல் 'ஆரேரோ, சோவியத் ஒன்றியத்தில் (பிரான்ஸில் இருப்போரைப்போன்று) வேலையற்ற 19 லட்சம் பேர் இருப்பதாகவும், சோவியத் தொழில் துறையில் தன்னியக்கம் காரணமாக வேலையில்லாமை தொடர்ந்து அதிகரித்துவருவதாகவும் தனது வாசகர்களுக்குத் தெரிவித்தது.

கோஸ்பிளானல் (சோவியத் ராஜ்யத் திட்டக்குழு) விடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி, தன்னியக்கத்தின் காரணமாக அதிகமுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை புதிய தொழிலகங்களைத் தொடங்குவது மற்றும் பழையவற்றை விஸ்தரிப்பதனல் உருவாக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கையில் அரைவாசியாகும். வேறு வார்த்தையில் சொன்னல், சோவியத் ஒன்றியத்தில் ஆண்டுதோறும் 20 இலட்சம் புதிய வேலைகள் உருவாக்கப்படுகின்றன; இந்த அதிகரிப்பு திட்டமிடப்படுகிறது.

உதாரணமாக, வர்ண தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான ஒளித்திரைகளை உற்பத்தி செய்யும் மாஸ்கோ குரோமெட்ரோன் ஆலையின் வேலை வாய்ப்பு நிலைமையைப் பரிசீலிப்போம். இங்கு உற்பத்திப் போக்குகளின் தன்னியக்கம் 83 சதவீதம், இது 1980ல் 90சதவீதமாக உயரும். அதிக தேர்ச்சி பெற்ற தொழிலாளி பாவேல கதால்யான் (27) பின்வரும் விபரங்களைத் தந்தார்; ஒரு உற்பத்திப் போக்கில் அறுபது பேர் உள்ளோம். அதை இயக்க இன்னும் அறுபது பேர் தேவை. நான் இங்கு இருந்த மூன்றாண்டுகளில் செயல்பாடுகளின் மூன்றில் இரண்டு தன்னியக்கமாக்கப் பட்டுள்ளன. தன்னியக்கம் எனக்கோ எனது தோழர்களுக்கோ அச்சுறுத்தலாக இல்லை. மாறாக அது வேலையை எளிதாக்குகிறது, மேலும் ஆர்வமுள்ளதாக்குகிறது,

ஆலையின் இயக்குநர் யூரி மஷின், ''தன்னியக்க சாதனத்தால் நிரம்பிய புதிய வேலைத் தளங்களின் நிர்மாணம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. இன்னும் ஆள்வலு பற்றாக்குறை இருக்கும்.எல்ஆரேரோ எழுதிய வேலையில்லாத பத்து இலட்சம் பேரில்-அது உண்மையாக இருக்குமானால்—சிலரை நாம் நிச்சயம் பயன்படுத்தமுடியும்'' என்று அவர் சொன்னார்.

> ...சோவியத் யூனியனில் ''இந்த ஒப்பந்தங்கள் மெய்யான வேலைப் பாதுகாப்பை வழங்கவேண்டிய அவசியமற்றவை; ஏனெனில், தகுதியின்மை, வேலைக்குச் செல்லாதிருத்தல் (நீண்டகாலம் நோயுற்ற நிலைமையிலும்) ஒரு தொழிலாளியை வேலைநீக்கஞ்செய்ய சட்டம் அனுமதிக்கிறது.... ஆனால், தொழிலகம் எளிதில் ஒரு தொழிலாளியை அவசியமற்றவரென அறிவிக்கலாம்.

...சோவியத் யூனியனில் வேலைநிறுத்தஞ் செய்யும் உரிமை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.''

ரோய் லெவின்,
த ஃபினேன்சியல் டைம்ஸ்
டிசம்பர் 11, 1974 லண்டன்.

தொழிலாளர் ஒப்பந்தத்தை தொழிற்சாலை அல்லது அலுவலக தொழிற்சங்கக் குழுவின் அங்கீகாரம் இல்லாமல் ஒரு தொழிலக, கழக, அல்லது நிறுவன நிர்வாகத்தின் முயற்சியின் பேரில் ரத்து செய்யமுடியாது.

''இந்த விதியின் பகுதி 1ஐக் கடைப்பிடிக்காமல் தொழிலாளர் ஒப்பந்தத்தை ரத்துசெய்வது சட்டவிரோதமானதாகும்; வேலை நீக்கப்பட்ட ஊழியர் மீண்டும் அவருடைய வேலையில் அமர்த்தப்படல் வேண்டும்.'' (ருஷ்ய சமஷ்டியின் தொழிலாளர் சட்டம், விதி-35).

''நிர்வாகத்தினுடைய முயற்சியின் பேரில் ஒரு தொழிலாளியை அவரின் தற்காலிக இயலாமையின்போதோ, அவரின் வருடாந்த விடுமுறையின் போதோ வேலைநீக்கஞ் செய்வது அனுமதிக்க முடியாததாகும்.'' (ருஷ்ய சமஷ்டியின் தொழிலாளர் சட்டம், விதி-35). ஏனைய யூனியன் குடியரசுகளின் தொழிலாளர் சட்டங்களிலும் இதுபோன்ற விதிகள் உள்ளன.

சோவியத் யூனியனில் வேலைநிறுத்த உரிமை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்று திரு. லெவின் எழுதுகிறார். அத்தகைய சட்டம் சோவியத் யூனியனில் கிடையாது. சோவியத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடாமல் இருப்பதற்குக் காரணம் வேலைநிறுத்தங்கள் ''அங்கீகரிக்கப்படாமல்'' இருப்பதல்ல; ஆனால், தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள அவர்களுக்குப் பிற வழிகள் இருப்பதுதான். முதலாவதாக, தொழிலகத்தை நிர்வகிப்பதில் தாமாகவே பங்கு கொள்கின்றனர்; இரண்டாவதாக, விஷயங்களைத் தீர்ப்பதில் அவர்

களது தொழிற்சங்கங்களுக்கு விரிவான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன; நிர்வாகத்தின் வேலைநீக்கத்தையும், தொழிலகத்தை மூடவும் அவை கோரலாம். 1972, 1973ல் 5000க்கும் மேற்பட்ட நிர்வாக ஊழியர்கள் சங்கங்களது கோரிக்கைகளின் பேரில் வேலைநீக்கப்பட்டனர்.

கூட்டங்களிலும், பத்திரிகைகள், மக்கள் கட்டுப்பாட்டு அமைப்புகள் மூலமாகவும் விமர்சனம் செய்யப்படுகிறது. சோவியத் யூனியனில் வேலை நிறுத்தங்களுக்கான காரணங்கள் நிலவவில்லை. பாவனைப் பொருட்களின் விலைகள் ஸ்திரமானவை. வாடகை 50 ஆண்டுகளாக அதிகரிக்கவில்லை. (பொதுப் பாவனைகளுக்கான கொடுப்பனவுடன் சேர்ந்து தொழிலாளி குடும்பம் ஒன்றின் பட்ஜெட்டில் இது 3 அல்லது 5 சதவீதம் தான்) நகர போக்குவரத்துக் கட்டணங்களும் குறைவானவை; ஸ்திரமானவை. வேலையில்லாமை நீண்டகாலத்திற்கு முன்னரே ஒழிக்கப்பட்டுவிட்டது. சம்பளங்களும் ஊதியங்களும் துரிதமாக அதிகரிக்கின்றன. மக்களின் மெய்வருமானங்கள் ஒவ்வொரு 15 ஆண்டுகளுக்கும் இரட்டிப்பாகின்றன.

> "......சோவியத் பிரஜை வேலை செய்ய சொல்லும் இடத்தில் வேலை செய்கிறார்; தான் வேலைசெய்ய விரும்பும் இடத்தில் அல்ல...சந்தையே இல்லாத பொருட்களை உற்பத்தி செய்வதை ஆலை நிர்வாகிதானுகவே காண்கிறார். தனக்குத் தேவையில்லாவிடினும் அவசியமில்லாவிடினும் அவர் தொழிலாளரைக் கூலிக்கமர்த்த வேண்டும்."
>
> ஜோசப் சி. ஹார்ஸ்க்,
> த கிரிஸ்டியன் ஸயன்ஸ் மொனிட்டர்,
> நவம்பர் 10, 1977

சோவியத் ஒன்றியத்தின் பொருளாதாரம் முகங்கொடுத்துவரும் சிரமங்கள் பற்றி சோவியத்

பத்திரிகைகள் விரிவாக எழுதுகின்றன. அவை பொதுத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், தனித்தேர்ச்சியாளர்களால் பகிரங்கமாக விவாதிக்கப்படுகின்றன. எனவே இந்த சிரமங்கள் நன்கு தெரிந்தவையே. ஏனெனில் சில தொழில்துறைப் பொருட்களுக்கு வரையறுக்கப்பட்ட தேவையே உண்டு; மேலும் சில தொழிலகங்கள் விநியோகம் மற்றும் பிற கடப்பாடுகளுக்கான காலஎல்லைகளை நிவர்த்திக்கத் தவறிவிடுகின்றன. பொருளியல் செயற்பாடுகளின் திறனை உயர்த்துவது பிற்காலத்தில் சோவியத் பொருளாதாரத்தின் பாரிய கடமையாக இருந்துவந்துள்ளது.

இந்தக் கஷ்டங்களைத் தெரிந்துள்ள திரு ஹார்ஸ்க் அவை போதியதல்ல என்கிறார். எனவே அவற்றுக்குக் கற்பனையான ஒன்றைச் சேர்க்கிறார்: சோவியத் பிரஜை தான் விரும்பும் இடத்திலின்றி அரசாங்கம் கூறுகின்ற இடத்திலேயே வசிக்கிறார், வேலை செய்கிறார் என்பதே அது. பின்னர், தானுகக் கண்டுபிடித்த இந்த ஆதாரத்தில் தனது வாதங்களை திரு. ஹார்ஸ்ச் தொடங்குகிறார்.

அவருடைய அறிக்கையையும் சோவியத் அரசியல் யாப்பின் விதி 40 ஐயும் ஒப்பிடுவோம். அது கூறுகிறது:

''சமுதாயத்தின் தேவையை சரியான முறையில் கவனத்திற் கொண்டு தமது விருப்பம், ஆற்றல் பயிற்சி, கல்வி ஆகியவற்றின் அடிப்படையில் தமது வேலையை அல்லது வாழ்க்கைத் தொழிலை அல்லது தொழில் ரகத்தைத் தெரிவு செய்யும் உரிமை உட்பட, சோ. சோ. கு. ஒன்றியப் பிரஜைகளுக்கு தொழிலுக்கான உரிமை (அதாவது உத்தரவாதயான வேலை, வேலையின் அளவுக்கும் தரத்திற்கும் ஏற்ப, அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச சம்பளத்திற்குக் குறையாத ஊதியம்) உள்ளது.

''இந்த உரிமை சோஷலிஸப் பொருளாதார அமைப்பாலும், உற்பத்திச் சக்திகளின் துரிதமான

வளர்ச்சியாலும், இலவசமான தொழில்முறை, உயர் தொழில் பயிற்சியாலும், திறமை விருத்தி செய்யப்படுவதாலும், புதிய தொழில்களிலும் உயர் தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படுவதாலும், தொழில் வழிகாட்டல், வேலை அமர்வு அமைப்பாலும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது''.

சோவியத் அரசாங்கம் தொழிலாளர்களை எங்கே வேலை செய்யவேண்டும், எங்கு வாழவேண்டும் என்பதை விரும்பியிருந்தால் சோவியத் ஒன்றியத்துக்கு அது இன்று முகங்கொடுக்கும் சிக்கலான பல பிரச்னைகள் இருக்காது. உதாரணமாக, பல இடங்களில், குறிப்பாக, சைபீரியாவில் தொழிலாளர் பற்ருக்குறை உள்ளது. விரிவான பொது போக்குவரத்து உள்ள மாஸ்கோவில் பஸ், ட்ரொலி, பஸ் சாரதிகளின் பற்ருக்குறை உளது. அநேக கூட்டு, அரசாங்கப் பண்ணைகள் தம்மிடம் இருப்போரைவிட பெரும் எண்ணிக்கையிலான இயந்திர இயக்குநர்களையும் பயன்படுத்த முடியும். கிராமப்புற சனசமூக நிலையங்களில் உள்ள கலாசாரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் போதுமானதல்ல. பல தொழிலகங்களுக்கு தட்டச்சாளர்களும் விற்பனையாளர்களும் மிக மிக அவசியமாகத் தேவைப்படுகின்றனர். திரு ஹார்ஸ்கின் கருத்துக்கள் உண்மையாயின் இவை இப்படியா இருக்கும்?

இங்கு அதிகாரிகள் செய்வதெல்லாம் லட்சக்கணக்காஞேரின் விருப்பங்களிலிருந்து எழும் மெய்யான நிலைமைகளைக் கணக்கிலெடுப்பதும், அதை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான தமது திட்டங்களுக்கு அடிப்படையாகக் கொள்வதும்தான். தொழில்களைக் கிழக்குக்குக் கொண்டு செல்வது, உயர்ந்த சம்பளங்களையும் பிற சலுகைகளையும் வழங்குவதுமூலம் சைபீரியா போன்ற இடங்களுக்கு அவர்கள்தொழிலாளரின் கவனத்தைஈர்க்கின்றனர். உபரியாக ஆள்வலு தேவைப்படும் பகுதிகளில் உழைப்பு—ஊக்க தொழில்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. சில தொழில்களில் தொழிலா

ளரின் பற்ருக்குறையும் பிறவற்றின் உபரித் தொழிலாளரும் மறுபயிற்சி மூலமும், தொழில்பயிற்சி முறையை விஸ்தரிப்பது மூலமும், அங்கு விசேட இரண்டாந்தரப் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் எத்தனைபேர் இருப்பர் என்பதை முன்கூட்டியே திட்டமிடுவதாலும் நெறிப் படுத்தப்படுகின்றன.

இத்தகைய நெறியாக்க முறைகள், நிர்வாகக் கட்டளைகள், அல்லது விளைவுகளைக் கருதாமல் தொழிலாளரைக் கூலிக்கு அமர்த்துவது போன்ற செயலூக்கமற்றவை என்பது புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனல் அத்தகைய முறைகள் சோவியத் ஒன்றியத்தில் கிடையாது; இருக்கவும் முடியாது.

> ''சி. ஐ. ஏ: சோவியத் யூனியன், தான் முன்வைத்துக் கொண்ட சமீபத்திய திட்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது இருக்கும்.''
>
> **லே சொயிர்,**
> *ஆகஸ்ட், 1976.*
> *பிரசல்ஸ்*

சோவியத் யூனியனின் பொருளாதார வளர்ச்சி அடுத்த ஐந்தாண்டுகளில் திட்டமிடப்பட்ட 5சதவீதத்திற்குப் பதிலாக 4சதவீதமாக இருக்கும் என்று சிஐஏ அறிக்கையின் கர்த்தாக்கள் உறுதிப் படுத்துகின்றனர். அவர்களின் கூற்றுப்படி, (1971ல் ஆரம்பமாகும்) தற்போதைய தஸாப்தத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில்— பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலம்— போருக்குப் பிந்திய ஐந்தாண்டு காலகட்டத்தோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவாகவே இருக்கும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்விபற்றி ஹேஸ்யம் கூறுவதற்கான சி. ஐ. ஏ.யின் முக்கிய காரணங்கள் யாவை?

அதியுயர்ந்த உழைப்பாற்றல் பிரச்னையை சோவியத் பொருளாதார நிர்வாகத்தில் ஒரு சீர் திருத்தம் இல்லாவிட்டால் தீர்க்கமுடியாது என்றும் உழைப்பு உற்பத்தி வளர்ச்சி 1980ம் ஆண்டுகளின் போது பெரு வீழ்ச்சியை அடையும் என்றும் சி.ஐ. ஏயால் தனிமைப்படுத்திக் காட்டப்பட்டுள்ள பிற நீண்டகால பிரச்னைகளில், ஆள்வலு பற்றுக்குறையும், சைபீரிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகரித்து வரும் செலவு காரணமாக மூலதன நிதியிடலிலிருந்து வரும் வருவாயும் அடங்கும்.

ஐந்தாண்டுத் திட்டம் காலாவதியாவதற்கு நாலரை ஆண்டுகள் இருக்கும் போதே அதுபற்றி சி. ஐ. ஏ. நிபுணர்கள் பொருளாதார முடிவுக்கு எப்படி வந்தனர் என்பது அவர்களின் சொந்த இரகசியமாகும். முன்னரைப் போலவே, சோவியத் தேசியப் பொருளாதாரம் அதன் அதியுயர் வளர்ச்சி வீதங்களுக்குப் பிரசித்தமானது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான தேசிய வருமானத்தில் திட்டமிட்ட சராசரி அதிகரிப்பு 24-28 சதவீதத்திற்கு இடைப்பட்டது. தொழில்துறை உற்பத்தியில் 35—39 சதவீதத்திற்கு இடைப்பட்டது: விவசாய உற்பத்தியில் (சராசரி ஆண்டுக் கொள்ளளவில்) 14—17 சத வீதத்திற்கு இடைப்பட்டது. உழைப்பு உற்பத்தியிலும் வாழ்க்கைத் தரத்திலும் கணிசமான அதிகரிப்பு ஏற்படவுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டில் முன்வைக்கப்பட்ட தொழில்துறை உற்பத்தியின் குறைந்த வருடாந்த வளர்ச்சி வீதங்கள், அதற்கு முந்திய சில ஆண்டுகளில் நிலவிய மிகமிக மோசமான காலநிலையால் விளக்கப்படுகின்றன. அடுத்த நான்காண்டுகளைப் பொறுத்த மட்டில் (1977-1980) தொழில்துறை உற்பத்தியில் 6.7-7.4 சதவீதமாகவும் உழைப்பு உற்பத்தியில் 5.9-6.7 சதவீதமாகவும் அதிகரிப்பு இருக்கும்.

ஆயினும், உயர்ந்த அதிகரிப்பு வீதங்கள் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினை முழுவதையும்

கவனத்தில் எடுப்பதில்லை. சம்பந்தப்பட்ட உற்பத்தி மட்டத்தையும் உற்பத்தி அதிகரிப்பின் தனி முழுமையான அளவையும் புறக்கணித்து விட்டு வெவ்வேறு வரலாற்றுக் காலங்களின் தொழில் துறை வளர்ச்சி வீதங்களை ஒப்பீடு செய்வது பிழையானதாகும். இதைத் தெளிவுபடுத்துவோம். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் கீழ் மின்வலு உற்பத்தியின் ஒருசதவீத அதிகரிப்பு 1040 கோடி கிலோவாட் மணிகள்—1920ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சாரத்தில் இரண்டு மடங்கு ஆகும். இன்று ஒரு சதவீதத்தின் கனபரிமாணம் இதுதான்.

> 1976 மார்ச்சில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் பற்றி விமர்சிக்கையில் ஸ்விஸ் பத்திரிகையான டை வெல்ட்வோச்சே பேச்சாளர்கள் பொருளாதாரக் குறைபாடுகளை, குறிப்பாக, பாவனைப் பொருட்களின் உற்பத்தி நிலைமையை மூடிமறைத்து விட்டனர் என்று வலியுறுத்திக் கூறியது.

25வது காங்கிரஸுக்கு சமர்ப்பித்த மத்தியக் கமிட்டி அறிக்கையில் லியோனிட் பிரெஷ்னேவ் கூறியதாவது: ''கடந்த ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கையில், சாதனைகளை மாத்திரமன்றி, சிரமங்களையும் குறைபாடுகளையும் தீர்க்கப்படாத பிரச்னைகளையும் காண்கிறோம். கம்யூனிஸ்ட்களுக்கே தனித்துவமான சுயவிமர்சனத்தினுல் இவை மத்தியக் கமிட்டியின் முழு நிறைவுக் கூட்டங்கள், கட்சிக் கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் ஒன்றியக் குடியரசுகளது கம்யூனிஸ்ட் கட்சிகளின் காங்கிரஸுகளில் முழுமையாக ஆராயப்பட்டன.

''ஸ்தூலமான சிரமங்கள் பற்றி நான் ஏற்கனவே பேசியுள்ளேன். தான்ய வீழ்ச்சி ஆண்டுகள் பண்ணைப் பொருட்கள், சில பாவனைப் பொருட்களின் உற்பத்தியையும் தேசிய வருமானத்தின் வளர்ச்சி வீதத்தையும் பாதிக்கின்றன.

''ஆனால் அது ஸ்தூலமான காரணங்களின் விஷயமல்ல; இதை வெளிப்படையாகத் தெரிவித்தாக வேண்டும். எமது சொந்தத் தீர்மானங்களுக்கு தேவைப்படும் வகையில் நாம் எப்போதுமே எங்ஙனுமே பணியாற்றியதில்லை.

''இருந்த போதிலும் 'பி' தொகுதி தொழில்களில் உள்ள நிலைமையைத் திருப்திகரமானதாகக் கருதமுடியாது என்று மத்தியக் கமிட்டி உணருகிறது. பிரச்சினை, பயிர் விளைச்சலில் பின்னடைவுகளால் அடிப்படை விவசாயப் பண்டங்களின் பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் மென் இயந்திரத் தொழிலிலும், உணவுத் தொழில்களிலும் பல பொருள்களின் உற்பத்தியிலும்திட்டமிட்ட இலக்குகளையடைவது சாத்தியமில்லாது போய்விட்டது என்பது மட்டுமல்ல. இந்தப் பிரச்சினை குறித்து இன்னும் பரந்த கூர்மையான முறையில் நாம் பேசவேண்டும். 24வது காங்கிரசில் மனிதனின் அன்றாட தேவைகளைத் திருப்தி செய்வதுடன் இணைந்த சகலவற்றின் பாலான கண்ணோட்டத்தில் ஒரு தீவிர மாற்றம் ஏற்படவேண்டும், பண்டங்கள், சேவைகளின் அளவிலும் தரத்திலும் ஓர் அடிப்படையான மாற்றம் உத்தரவாதம் செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டது. கடமையின் முழுப்பரிமாணத்தைச் சமாளிப்பது சாத்தியமாகவில்லை என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும், கனரகத் தொழிலில் ஓர் உயர் விகித வளர்ச்சியை உத்தரவாதம் செய்யும் அதே பொழுதில் ''பி'' தொகுதியையும் சேவைகள் தொழிலையும் முன்னிலும் வேகமான விகிதத்தில் வளர்ப்பதற்கு நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.''

அலெக்ஸி கோசிகினின் அறிக்கையிலிருந்து: ''பாவனைப் பொருட்களின் உற்பத்தி முக்கியமாகச் சார்ந்திருக்கும் மென்தொழில் மற்றும் பிற தொழில்களில் அவற்றிலிருந்து எழும் தேவைகளை இன்னும் பூரணமாக நிவர்த்திக்கவில்லை.''

சோவியத் ஒன்றியத்தின் மென்தொழில் அமைச்சர் நிக்கலாய் தாராசோவின் பேச்சிலிருந்து: ''மென்தொழில் ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்ட இலக்குகளை இன்னும் பூரணமாக நிவர்த்திக்க வில்லை. அது எமது மக்களுக்கு இன்னும் பெருங் கடன்பட்டுள்ளது.''

பிரிட்டிஷ் சஞ்சிகையான த எகோனேமிஸ்ட் தனது மார்ச், 1977 இதழில், ருஷ்யர்கள் பின்தங்கிய குடியரசுகளின் தொழிற்துறை வளர்ச்சியாலும், அதன் விளைவால் அவற்றின் சுதந்திரத்தின் அதிகரிப்பாலும் கவலை கொண்டுள்ளனர்; சுதந்திரத்திற்கான எந்த பிரயத்தனத்தையும் நீக்குவதற்காக இக் குடியரசுகள் மீது தனியொரு பண்டப் பொருளாதாரக் கட்டமைப்பைத் திணிக்க எண்ணியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டிற்று. மத்திய ஆசியக் குடியரசுகளிலும் ஆஜர்பைஜானிலும் ருஷ்யாவைவிட அதிகரிப்பு நிர்ப்பந்தத்தை உணர்ந்த அவர்கள் உபரியான ஆள்வலுவை சைபீரியாவுக்கு மாற்றுவதற்கு எண்ணியுள்ளனர் என்றும் இக்கட்டுரை கோரியது.

த எகோனேமிஸ்ட்டுக்கு ஒரு விஷயத்திற்சாக பெருமை அளிக்கவேண்டும்: கலோனியல் ஆதிக்க முறைகளில் அதற்கு அதிக பரிச்சயம் உண்டு. தனியொரு பண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு ஒரு நாட்டின் பொருளாதார சார்புக்கு நிச்சயமான உத்தரவாதமாகும். உதாரணமாக, 1917 புரட்சிக்கு முன்பு ருஷ்ய அரசாங்கம் அத்தகைய கட்டமைப்பை ஆஜர்பைஜான் மீது திணித்தன அங்கு அது பெட்ரோலியத்தின் அகழ்வு, பதனிடலை ஊக்குவித்தது; வேறெதையுமல்ல. இதை

நிவர்த்திப்பது எளிதல்ல, ஆனால், இதோ சில பயன்கள்: 1940க்கும் 1975க்கும் இடையே ஆஜர்பைஜான் எண்ணெய்த் தொழில் இரட்டித்தது; அதே சமயம் பொறி இயந்திரவியல் மற்றும் உலோக வேலைத் தொழில்களின் உற்பத்தி 34 தடவைகளும் உலோகவியல் தொழில் அதைவிடவும் அதிகரித்தது.

த எகோனோமிஸ்ட் கோருவதைப் போல, பின்தங்கிய குடியரசுகளின் தொழிற்துறை வளர்ச்சியால் கவலை கொண்டு அவற்றின் மீது தனியொரு பண்டப் பொருளாதாரக் கட்டமைப்பைத் திணிக்க இப்போது ருஷ்யர்கள் முயல்கிறார்கள் எனில், அதை முன்னமேயே செய்வதிலிருந்து அவர்களைத் தடுத்தது எது? அல்லது அவர்கள் தவறாகக் கணித்துவிட்டார்களா, தமது தவறைத் திருத்துவதற்கு இப்போது முயற்சிக்கிறார்களா?

சோவியத் ஒன்றியத்திற்கு விஜயஞ் செய்த இருவர், சாரதா மித்ரா (இந்தியா) அடெல் ஹாபா (ஈராக்)—இவர்கள் தமது நாடுகளின் அரசியல் பிரமுகர்கள்—ஆஜர்பைஜானியக் கட்சித் தலைவரான ஈ ஜி சர்கிஸ்யானை எகோனோமிஸ்ட் சாட்டியுள்ள குற்றச் சாட்டுக்களைப்பற்றி கருத்துத் தெரிவிக்கக் கேட்டனர். இதோ அவர் கூறியது:

"ஆஜர்பைஜானில் பெரும் ஜனத்தொகை வளர்ச்சி ஒரு தேசிய அம்சமாகும். எனவேதான் அதன் தலைமை பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலகட்டத்தின் (1976—80) போது ஆஜர்பைஜானில் தொழில் உற்பத்தியை அதிகரிக்கும் பிரச்னையை மாஸ்கோவில் எழுப்பியது. இதன்படி. 16 பாரிய தொழிலகங்கள் இச்குடியரசுக்கென திட்டமிட்டுள்ளன. உற்பத்தியைப் பன்முகப்படுத்துவற்கு இவை உதவும். அங்கு உழைப்புச் சக்தி அதிகரிப்பதன் காரணமாக, மாஸ்கோவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உள்நாட்டு குளிரூட்டல் பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கான உலகின்

மிகப்பெரிய ஆலைகளில் ஒன்று ஓராண்டுக்கு பாகூவில் கட்டப்பட்டது. இதற்கு சும்கெய்டும் ஒரு உதாரணம்; 190,000 மக்களைக் கொண்ட, 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நகரம். இன்று அது, அங்கு வசிக்கும் ஒருவருக்கான தொழில்துறை உள்ளாற்றலில் சோவியத் யூனியனிலே முதல் இடத்தை வகிக்கிறது.''

அல்லது, மத்திய ஆசியாவிலுள்ள ஒரு சோவியத் குடியரசான உஷ்பெக்கிஸ்தானைப் பரிசீலிப்போம். அதன் முக்கிய செல்வம் பருத்தி. ஆனல் அந்தக் குடியரசு இப்போது தொழில்துறையின் 100க்கும் மேலான பிரிவுகளில் 1,300க்கும் அதிகமான பெரும் தொழிலகங்களைக் கொண்டுள்ளது. 1942ம் ஆண்டில் உஷ்பெக் குடியரசு உருவாக்கப்பட்டது முதல் அதன் தொழில் உற்பத்தியின் அளவு 160 தடவைகளுக்கு மேல் அதிகரித்துள்ளது. அடவிலுள்ள கிர்கீஸியாவில் ஒரு இயந்திரத்தைப் பார்த்திராத இடையர்களின் குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் பல்வேறு கருவிகளையும், பண்ணை இயந்திரத்தையும், வேலை—கட்டுப்பாட்டு உபகரணங்களையும் உற்பத்தி செய்ய கற்றுக் கொண்டுள்ளது. கிர்கீஸ் தொழில்துறையிடம் 100க்கும் அதிகமான பிரிவுகள் உள்ளன.

மத்திய ஆசியக் குடியரசுகளில் உற்பத்தி சக்திகளின் துரிதமான சர்வாம்ச வளர்ச்சியை எவரும் கைவிட்டதில்லை; அல்லது கைவிட எண்ணுவதில்லை. இதற்கான சான்றை அவற்றின் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகை செய்கின்றன. இவை தொழில் வளர்ச்சியில் உயர் வீதத்தை, சிலவற்றில் சோவியத் யூனியன் முழுமைக்குமான சராசரியைவிட உயர்ந்ததை முன்வைக்கின்றன. உதாரணமாக, தாஜிகிஸ்தானின் திட்டம் மின், இரும்புக் கலப்பற்ற உலோகங்கள், இரசாயன தொழில்களுக்கு முதனிலை வளர்ச்சியையும், மென், உணவுத் தொழில்களின் பழைய தொழிற்சாலை, ஆலைகளின் விஸ்தரிப்பையும் புதியவற்றைக் கட்டுவதையும்

வகை செய்கின்றபோது அங்கே ''குறுகிய பொருளாதார நிபுணத்துவம்'' பற்றி ஒருவர் எவ்வாறு கருத்தாழமுடன் பேசமுடியும்?

> ''...நான் புதிய சோவியத் அரசியல் யாப்பின் நகலைப் படித்தேன். சொந்த சொத்துக்கான பிரஜைகளின் உரிமையும் அதைப் பிதுரார்ஜிதமாகப் பெறும் உரிமையும் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டிருப்பதைக் கண்டு திகைத்தேன். இந்தச் சட்டத்தை உண்மையான சோஷலிஸ அரசின் கோட்பாடுகளுடன் சரிப்படுத்துவதற்கு. நான் கஷ்டப்படுகிறேன். ஆஸ்திரேலியாவிலுள்ள நாம் உங்களது நாட்டில் தனிச்சொத்தே கிடையாது என்று நம்புவதற்குஇட்டுச் செல்லப்படுகிறோம்.''
>
> மைக்கல் கிறிஸ்டி,
> கிங்ஸ்பர்ட், ஆஸ்திரேலியா

இது சோவியத் சஞ்சிகையான நியூ டைம்ஸிற்கு வந்த கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டது. அது ஒப்பீட்டளவில் புதியதொரு இயல் நிகழ்வை—''இடதுசாரி நிலைப்பாட்டிலிருந்து'' சோவியத் யூனியனை வியர்சிப்பதை—சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய விமர்சனம் சோவியத் ஒன்றியத்தின் புதிய அரசியல் யாப்பு நகல் மீதான விவாதத்தின்போது எழுப்பப்பட்டது; புதிய அரசியல் யாப்பை ஏற்ற சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தினுடைய 1977 அக்டோபர் கூட்டத்தின் போது லியோனிட் பிரெஷ்னேவ் இந்த அம்சத்தைக் குறிப்பிட்டார். இந்த அரசியல் யாப்பு கம்யூனிஸத்தின் கீழ் அரசு உதிர்ந்து உலர்வது பற்றிய மார்க்ஸிய கருத்தமைப்புக்கு இசைவற்றது என விமர்சகர்கள் கோரினர். உதாரணமாக, நியூயோர்க் டைம்ஸ், சோவியத் அரசு உதிர்ந்து உலர முடியாமல், விரும்பாமல் உள்ளது என்று விமர்சித்தது.

''எம்மைக் கண்டிப்போர், முக்கியமான விஷயத்தை எமது அரசினதும் சமுதாயத்தினதும் வளர்ச்சியில் இயக்கவியலை, அதாவது, சோஷலிஸ அரசின் வளர்ச்சியோடும் முன்னேற்றத்தோடும் கோடிக்கணக்கான பிரஜைகள் அரசாங்கம் மற்றும் மக்கள் கட்டுப்பாட்டு அமைப்புகளின் நடவடிக்கைகளிலும், உற்பத்தி, பங்கீட்டின் நிர்வாகத்திலும், சமூக, கலாசாரக் கொள்கைகளிலும், நீதி நிர்வாகத்திலும் அதிகரித்து அளவில் பங்கு கொள்கின்றனர் என்பதை, காணமுடியாமல் அல்லது காண விரும்பாமல் இருக்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால் சோஷலிஸ ஜனநாயகத்தின் வளர்ச்சியுடன் எமது ராஜ்யத்துவமானது படிப்படியாய் கம்யூனிஸ சமூக சுயாட்சியாக உருமாற்றப்பட்டு வருகிறது. உண்மையில் இது ஒரு நீண்ட போக்கு, ஆனால், அது துரிதமாக நடைபெற்று வருகிறது,'' என்று லியோனிட் பிரஷ்னெவ் சொன்னார்.

இன்னும், நியூ டைம்ஸ் வாசகர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல சொந்தச் சொத்தை, தனிச் சொத்துடன் குழப்பிவிடக் கூடாது. எமது நாட்டில், ஒரு தொழிற்சாலை, புகையிரதம், உணவு விடுதி அல்லது சினிமாவை எவரும் சொந்தமாக வைத்திருக்கமுடியாது; ஏனெனில், இதை அனுமதிப்பது ஏனைய மக்களின் உழைப்பில் செழுமையடைவதை சமுதாயம் ஒப்புக்கொள்வதைப் பொருள் படுத்தும். குறிப்பாக, உற்பத்திக் கருவிகள், சாதனங்களில் தனியார் சொத்துடைமையை ஒழித்துக் கட்டியமைதான், சோவியத் மக்கள் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு முடிவு கட்டுவதையும், மேம்படுத்தப்பட்ட உழைப்பை ஒவ்வொரு பிரஜையின் நல்வாழ்வுக்கு ஒரே மார்க்கமாகச் செய்வதையும் சாத்தியமாக்கிற்று, சோவியத் அரசியல் யாப்பின் ஆணை 10 கூறுவதைப் போல ''சோவியத் ஒன்றியத்தினுடைய பொருளாதார அமைப்பின் அடித்தளம் உற்பத்திச் சாதனங்களில் சோஷலிஸச் சொத்துடைமை ஆகும்...'' இது ஒரு மெய்யான சோஷலிஸ அரசினை ஆளுமை செய்யும் கோட்பாடுகளுக்கும் பூரண இசைவுள்ளது.

நாம் சொந்த சொத்தை விவாதிப்போம், நியூ டைம்ஸ் கூட்டு ஆசிரியர் போரிஸ் பிஸ்சிக், ஆஸ்திரேலியா, கிங்ஸ் போர்டைச் சேர்ந்த மைக்கல் கிறிஸ்டிக்கு எழுதிய பதில் இதோ: ''சோஷலிஸத்தின் எதிரிகள் சில ஆண்டுகளுக்கு முன்னர் எமது நாட்டைப் பற்றிய கட்டுக்கதைகளைபரப்புவதற்குப் பயன்படுத்தியவற்றை பழைய தலைமுறை நினைவில் வைத்திருக்கும். பொதுவான கட்டுக்கதைகளில் கூட்டுப்பண்ணைகளிலுள்ள விவசாயிகள் மனைவியரை பொதுவாக பகிர்ந்து கொள்வதும் அங்கிருந்த இராட்சஸ அளவு படுக்கைகளையும் பற்றிய'' நேரில் கண்டோர் கூற்றுக்கள் அடங்கும். இது எனக்கு ஞாபகம். எனவே, எமது அரசியல் யாப்பு நகல் சொந்த சொத்து உரிமையை பிரகடனம் செய்கிறது என்பதைக் கண்டு நீங்கள் ''திகைத்தது'' எனக்கு ஆச்சரியமல்ல. சொந்த சொத்தை பொதுப் படுக்கைகளுடன் சமனீடு செய்வது கஷ்டமானது என்பது வாஸ்தவமே!

''உண்மையில்; ஒரு சோவியத் பிரஜையின் சராசரி வீட்டை நீங்கள் எவ்வாறு மனக்கண்ணில் காண்கிறீர்கள்? சொல்லின் மாமூல் பொருளில் அது முற்றிலும் நிலவுகிறதா? சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யும் எவரும் தானகக் காணும் வகையில் இது நிலவுகிறது என்பதே உண்மை. மேலும் வேறு எங்காயினும் உள்ள வீட்டைவிட அடிப்படையில் அது வேறுபடவும் இல்லை. நவீன வாழ்வின் சகல வசதிகளும் அங்குள்ளன. கூட்டுறவு மற்றும் தனிநபர் வாகனக் கொட்டகைகளில் தனிப்பட்ட முறையில் சொந்தமாக இருக்கும் கார்களையும், மோட்டார் சைக்கிள்களையும், நதிகள், குளங்களில் படகுகளையும் இயந்திரப்படகுகளையும், நீங்கள் காணலாம் இவையெல்லாம்—வீடு, தோட்டம், வீட்டு மிருகங்கள், மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள்—தனிப்பட்ட பிரஜைகளின் சொத்தாகும். இவை சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றன. உரிமையாளரின் மரணத்திற்குப் பின்னர் இவை

யனைத்தும் அவரின் வாரிசுகளுக்கு அல்லது தனது சொத்தை யாருக்கு உயில் எழுதிவைத்தாரோ அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

''கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை தாக்கீதுகளும் எமது அரசின் திட்டங்களும் சொந்தப் பாவனைத் துறையையும், சொத்துத் துறையையும் விஸ்தரிப்பதற்கு வகை செய்கின்றன. இது உழைக்கும் மக்களின் வருமானங்களது வளர்ச்சியின் இயல்பான தொடர்ச்சியாகும். இவையெல்லாம் விஸ்தாரமான வீட்டுப்பாவனைப் பொருட்களை அதிகரிக்கின்றன; தனிப்பட்ட, கூட்டுறவு வீடமைப்பு நிர்மாணத்தை ஊக்கப்படுத்துகின்றன.

''சோஷலிஸம், குறிப்பாக சோவியத் யூனியனில் அடையப் பெற்றுள்ள அதன் வளர்ச்சிக் கட்டம், மக்களுடைய வாழ்வின் பொருளாயத கலாசார தரங்களின் துரிதமான அபிவிருத்தியை முன்வைக்கிறது, உண்மையிலேயே இது எமது தொழில்துறை. விவசாய உற்பத்தி இலக்காகும். உதாரணமாக 1965ல் கிராமப் புறத்திலுள்ள பத்து குடும்பங்களில் ஒன்றிலே குளிர்பதனப் பெட்டி இருந்தது. 1980ல் சுமார் 10 குடும்பங்களில் ஒன்பதில் இவை இருக்கும். எமது நாட்டின் பிரஜைகளின் நல்வாழ்வு சொந்த சொத்தின் தொகையில் சார்ந்திருப்பதில்லை. இதுமற்றுமொரு முக்கியமான விஷயம். தொழிலையும் அதிகரித்து வரும் சமூக பயனீட்டு நிதிகளையும் அடிப்படையாக கொண்டுள்ளது. எமது நாட்டில் பெருந் தொகையான வீடுகள் அரசுக்குச் சொந்தமானவை, குடும்ப வருமானத்தின் சராசரி 3-4 சதவீத வாடகையில் பிரஜைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. என்பதும் ஓர் அம்சமாகும்''

''சோவியத் தலைவர்களின் கருத்துப்படி விவசாய தொழில்மயமாக்கல் கிராமப்புறத்தின் ஒருவித 'நகர் மயமாக்கல்' உடன் இணைந்து வர வேண்டும். மக்கள் தமது சொந்த

வீடுகளிலன்றி நகர-வகை கேந்திரங்களில் வாழ கட்டாயப்படுத்தப்படுவர். ஆனால் இவ்விஷயத்தில் ஒருவர் தனது சொந்த காணித் துண்டில் வேலை செய்வது அல்லது கால்நடைகளை வளர்ப்பதுடன் அவை நகர வாழ்வுமுறையை எவ்வாறு பிணைக்க முடியும்?''

லேமொன்டேஜுன் 7
1976 பாரிஸ்

சோவியத் யூனியனின் நோக்கங்களில் ஒன்று ''கிராமங்களில் தினசரி வாழ்வின் நகர சூழ்நிலைகளை ஸ்தாபிப்பதாகும்.'' குழாய்நீர், வாயு; மத்திய வெப்பமேற்றல் அமைப்பு போன்ற இன்னோரன்ன பலவற்றை வகைசெய்வதே இதன்பொருள். எதிர்கால கிராமங்களின் வீடுகளைப் பொருத்த மட்டில் பெரும்பாலும் அவை ஒரு குடும்பத்திற்காக கட்டப்படும் அதேசமயம் பெறும் தொழில் வகை விவசாயத் தொழிலகங்களுக்கு அடுத்துள்ள குடியிருப்புக்களில் பல குடும்பங்களுக்கான வீடுகள் இருக்கும். அத்தகைய தொழிலகங்கள், இவ்வகை குடியிருப்புக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையானது சாதாரண சிறப்பான வசதிகளைக் கொண்ட கிராமங்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் பெருமளவுக்கு சிறியதாகவே இருக்கும்.

''மக்கள் தமது சொந்த வீடுகளிலன்றி நகர-வகை கேந்திரங்களிலேயே வாழ நிர்ப்பந்திக்கப்படுவர்'' என்ற கூற்று அடிப்படையில் பிழையானதாகும். வீட்டுப் பிரச்சினைகளில் எந்தவித கட்டுப்பாடுகளும் இணைக்கப்படுவதில்லை. இப் போது பொதுப் போக்குகளைப் பரிசீலித்தால் அது ஒரு வேறுபட்ட விஷயமாகும். தமது சொந்த காணித் துண்டுகளை வைத்துக்கொண்டு நவீன கிராமத்திலான தமது வாழ்வை இரண்டறக் கலக்க விரும்பும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகம் ஆனால் இது ஒரு சரிவுப்போக்கையே காட்டுகிறது. முக்கியமாக கிராமபுற மக்கட் தொகையின் அளவு சுருங்குவது

அதிகமான இளம் மக்கள் நகரங்களில் வாழவிரும்புவதும் இதற்கு காரணமாகும். ஆயினும் புள்ளி விபரங்களை ஆராய்கையில் இவர்கள், தொழில் துறை போக்கு நடத்தப்படுகின்ற பெரும் பண்ணைகளைச் சுற்றி உருவாகிவரும் பெரும் நகரவகை குடியிருப்புக்களில் குடியமர விரும்புகின்றனர்,

''சோவியத் ஒன்றியம்: சொந்த காணித்துண்டுகளை அதற்றுவதற்கு மத்தியக்கமிட்டி தீர்மானிக்கிறது.''

லெபிகாரோ
ஜூன் 3, 1976
பாரிஸ்.

''......சொந்தக் காணித்துண்டுகளுக்கு அதிக அக்கறையும் கவனமும் செலுத்தப்பட வேண்டும்.'' (கம்யூனிஷ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அக்டோபர் 1976, முழுநிறைவுக் கூட்டத்தில் பேசுகையில் லியோனிட் பிரெஷ்னேவ்.)

''விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 240 லட்சம் பேர் போதாத சம்பளம் வழங்கப்படுவதோடு மாத்திரம் அன்றி அரசினுல் கைவிடப்பட்டவர்களாகவும் உணர்கின்றனர்.''

ஆர்னேல்ட் வெயின்காட்னர்
டியட்ஸே செயித்துங்,
ஜூலை 2, 1976.
டர்மிஸ்டாட் சமஸ்டிக் ஜேர்மனி.

மேலைநாட்டு விவசாயி ஒருவர் பயிற்சி அல்லது தனது பராமரிப்பிற்காக பணம் செலுத்தாமல் தொழில்முறை தொழில்நுட்ப பள்ளியில் இயந்திர ஓட்டுநர் தொழிலை கற்கமுடியுமா? முடியாது. ஆனல் சோவியத் யூனியனிலுள்ள ஒரு விவசாயி

யால் முடியும். மேலேய விவசாயிக்கு அவர் நோயுற்ற நாட்களில் சம்பளம் கொடுப்பது யார்? எவரும் இல்லே. நோய் என்ருல் நட்டம். இது தெட்டத் தெளிவு. சோவியத் கூட்டுப்பண்ணே விவசாயி நோய்க்கால கொடுப்பனவை பெறுகிருர். அவர் பண்ணேயின் விவகாரங்கள்பற்றி கவலேப்படத் தேவையில்லே, ஏனெனில், அங்கு வேலே கூட்டாக செய்யப்படுகிறது; தனது அறுபதாவது வயதில் (பெண்கள் 55 வயதில்) ஓய்வூதியம் பெறுகிருர். அவரின் குழந்தைகள் தமது விருப்பப்படி உயர் கல்விகூட இலவசமாக பெறுகின்றனர். கூட்டுப் பண்ணேயானது அவர் வீட்டைக் கட்டிக்கொள்ள உதவுகிறது. அல்லது அவருக்காக அதைக் கட்டிக் கொடுக்கிறது. அதன் பின்னர் அதை பாவிப்பதற் காக ஒரு மிகச் சிறிய வாடகையையே அவர் செலுத்துவார். தனது சம்பாத்தியத்திற்கு மேலாக தனது சொந்த துண்டுக் காணியிலிருந்தும் கூட்டுப் பண்ணே விவசாயி வருமானம் பெறுகிருர். இது அவருக்கு இலவசமாக வழங்கப்படுகிறது, இதில் அவர் கூட்டுப்பண்ணே இயந்திரங்களேயும் பாவிக்க முடியும்.

கைவிடப்படுவதற்கு மிகச்சிறந்த வழி, இது இல்லேயா?

> "சோவியத் யூனியனில் சொந்தக் காணித் துண்டுகளில்—ஒவ்வொருவருக்கும் 0.3 முதல் 0.6 ஹெக்டர் வரை—பயிர்செய்யும் விவசாயிகள் சந்தையிலுள்ள 64 சதவீதக் கிழங்குகளேயும் 40 சதவீத மரக்கறிகளேயும் 33 சதவீத முட்டைகளேயும் சப்ளே செய்கின்றனர். ஆனல் இந்த "துலாம்பரமான முதலாளித்துவ" உதாரணம் இருந்தபோதிலும் கூட சோவியத் தலேமையானது தத்துவார்த்தக் காரணங்களுக்காக கூட்டுப் பண்ணே அமைப்பை விட்டுவிட அல்லது கட்டுறுதியைக் குறைக்கத் துணியவில்லே." பெர்லினர் கூரியர்
> ஜூலே 24, 1976 மேற்கு பெர்லின்

இதை மேலும்பூரணப்படுத்துவதற்கு, பின்வருவனவற்றைச் சேர்க்கவேண்டும்: தமது சொந்தப் பாவனைக்காக விவசாயிகளுக்கு நிலம் இலவசமாக கொடுக்கப்படுகிறது; வரி பெயரளவுதான்; கால் நடை மருத்துவ சேவைகள் இலவசம்; கூட்டுப் பண்ணை தனது உறுப்பினர்களுக்கு இயந்திரங்களையும் பிற பண்ணை கருவிகளையும் போக்குவரத்தையும் தீவனத்தையும் கொடுத்துதவுகிறது. இவை எல்லாம் ''முதலாளித்துவ'' உதாரணத்துடன் அதிக சம்பந்தமுடையனவா?

அரச மட்டும் கூட்டுப் பண்ணைகள் நாட்டின் தானிய முழுவதையும் பயிர்செய்கின்றன. அதில் அதிகம் விவசாயிகள் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கும் கால்நடைகளுக்கு உணவளிக்கச் செல்கின்றன. அரச—கூட்டுபண்ணை அமைப்பு சோவியத் யூனியனின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது. அதை ஒழிப்பதற்கான எந்த முயற்சியும் பெரும் ஆத்திரத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தும். 1917ம் ஆண்டின் சோஷலிஸ புரட்சியைப் போல ஒன்று தவிர்க்கமுடியாததாயிருக்கும். நாடு மீண்டும் கூட்டு, அரசு பண்ணைகளை பெற்றுவிடும் என்னும் அளவுக்கு இரண்டறக் கலந்துள்ளன.

பெர்லினர் கூரியரின் ''துலாம்பரமான முதலாளித்துவ உதாரணம்'' மற்றுமொரு குறைபாட்டையும் கொண்டுள்ளது: பாவனையாளர் தமக்குத் தேவையான கிழங்கு, மரக்கறி, முட்டை மற்றும் பிற உணவுப் பொருட்களின் பெரும் பகுதியை அரச கூட்டுறவுக் கடைகளிலிருந்தும், 4 சதவீதத்தை மட்டுமே சந்தையிலும் பெறுகிறார் என்பதை இப் பத்திரிகை குறிப்பிடத் தவறிவிடுகிறது.

> ''சோவியத் துப்பாக்கிகள், ஏவுகணைகள், நீர்மூழ்கிகள் மற்றும் விமானங்களின் உற்பத்திக்கும் சோவியத் யூனியனில் அடிக்கடி அதிகரித்துவரும் உணவு விநியோக 'முட்டுக்கட்டை'களுக்கும் நேரடித் தொடர்பு உள்ளது.''
>
> **பெர்லினர் கூரியர்**
>
> மே 29, 1976, மேற்கு பெர்லின்

கடந்த ஐந்தாண்டுகளில் 1975 மிகக் குறைந்த தான்ய அறுவடையை—14 கோடி தொன்களை— கண்டது. ஆனால், இவை ஒவ்வொரு நூற்றாண்டிலும் நிலவாத காலநிலையில் பெறப்பட்டன. பல நம்பத்தக்க மேலைய வெளியீடுகள் ஒப்புக்கொண்டதைப் போல, 14கோடி என்ற புள்ளி விபரம் பத்தாண்டுகட்கு முன்னர் மனப்பதிவு மிக்கதாகத் தோன்றியிருக்கக் கூடும்.

தானிய கொள்வனவுகள் பற்றி என்ன சொல்வது? 1973, 1974ல் ஆண்டிற்கான தான்ய பயிர் சுமாராக 2090 லட்சம் தொன்களாகும். ஆனால், சோவியத் யூனியன் இன்னும் பெருமளவு தான்யத்தை வெளிநாடுகளில் இருந்து வாங்கியது. எவரும்—தான்யம் வந்த நாடுகளின் விவசாயிகள் கூட—புகார் செய்யவில்லை. ஆனால், ஜாரின்கீழ் விவசாயம் மலர்ச்சியடைந்தது; ருஷ்யா தானியத்தை ஏற்றுமதி செய்தது என்று வலியுறுத்தியோர் பலர் இருந்தனர்.

ஜாரின் ருஷ்யா தான்ய ஏற்றுமதி செய்தது உண்மையே. ஆனால், அக்காலங்களில் நாட்டில் நிலவிய போஷாக்கின்மையின் வியாபிதம், முழுப் பஞ்சம் குறித்து மேலைய அவதானிகள் அச்சம் கொண்டனர். ஜாரிஸ ருஷ்யா ஆகக்கூடுதலாக உற்பத்தி செய்த தொகை ஏழு கோடி தொன்கள். சோவியத் யூனியனில் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கான ஆண்டின் சராசரி 18 கோடி தொன்களுக்கு மேலாக இருந்தது. சில உணவுப் பொருளில் பழைய ருஷ்யாவினதும் சோவியத் யூனியனினதும் நபர் வீதப் பாவனையை ஒப்பிடுக: இறைச்சி முறையே பழைய ருஷ்ய ராத்தல்களில் 65—130—பால் 400—800 ருத்தல்கள், முட்டைகள் 75-220 ஆகும் சோவியத் யூனியனில் நபர்வீத தான்ய உற்பத்தி ஜாரிஸ ருஷ்யாவைவிட இரு மடங்காகும் என்று மேலோட்டமான மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. இருப்பினும், மேற்கிலிருந்து பெருமளவுகளில் சோவியத் யூனியன் தானியத்தைத் தொடர்ந்தும் வாங்கி வருகிறது. இறைச்சி,

கோழிப்பண்ணை உற்பத்தியை அதிகரித்திட தானியம் தேவைப்படுகிறது. இப்பிரச்னை விரைவில் சமாளிக்கப்படவுள்ளது. இதைச் செய்வதற்கான வலுவும் மூலவளங்களும் நாட்டிடம் உண்டு.

உணவு விநியோக ''முட்டுக்கட்டை''க்கும் ஆயுத உற்பத்திக்கும் இடையேயான ''நேரடி தொடர்பை''ப் பொறுத்தவரையில், ஆண்டுக் காண்டு அதிகரித்து வரும் விவசாய மூலதன நிதியிடலை, வெட்டிக்குறைக்காவிட்டால் பெருகிவரும் பாதுகாப்புச் செலவினத்தோடு ஒருவர் ஒப்பிட வேண்டியுள்ளது. இப்பாதுகாப்புச் செலவினங்கள் தீவிரமாகக் குறைக்கப்பட்டு அல்லது முற்றாக இல்லாதொழிக்கப்பட்டிருந்தால் விவசாயமும் பிற பொருளாதாரத் துறைகளுமே பயனடையும். ஆனால் சோவியத் யூனியன் இதை ஒருதலைப்பட்சமாகச் செய்யமுடியாது—அது ஆயுதப் பளுவை சுமக்கவேண்டியிருப்பது தனது சொந்தத் தவறினால் அல்ல

> ஜூன் 5, 6, 1976ம் திகதிய டைவெல்ட் மாஸ்கோவில் ஒரு ருத்தல் கிழங்குக்கு ஒருவரின் தினசரி வருமானத்தில் அரைவாசி செலவாகிறது என்றும், ஒரு டஜன் முட்டைகளை, ஒரு ருத்தல் வெண்ணெயை அல்லது இரண்டு ருத்தல் பாலடைக் கட்டியை விட மேலாக ஒரு நபர் கடைகளில் வாங்க முடியாதுள்ளது என்றும் கூறும் எஸ்ஏடி அறிக்கையினை வெளியிட்டது.

சோவியத் பத்திரிகையாளர் மிகையில் லெவின் எழுதுகிறார்; ''மாஸ்கோவில் ஒரு ருத்தல் கிழங்கு சுமார் 5 கொப்பேக்குகளே, ''ஒருவரின் தினசரி வருமானத்தில் அரைவாசி அல்ல'' சாதாரண மனிதன் தனது தினசரி வருமானத்தில் 70 ருத்தல் கிழங்கை வாங்க முடியும்.

''இன்று நான் உணவுச் சாமான் வாங்கச் சென்றேன். எனக்கு இரண்டு ருத்தல் பாலடைக் கட்டி தேவைப்படவில்லை. நான் முதலில் நுழைந்த கடையின் விற்பனைப் பெண்ணிடம் இரண்டு ருத்தல் வெண்ணெய்யும், மூன்று டஜன் முட்டைகளும் கேட்டேன்: உடனடியாகப் பெற்றும் கொண்டேன்.''

பயிற்சி மூன்று

சோவியத் வாழ்க்கை முறை

"சோவியத் யூனியன் தற்போது மத சுதந்திரம் மற்றும் பிற மனித உரிமைகளுக்குத் கருத்தளவில் கட்டுப்பட்டுள்ளது என்பதே ஒப்பந்தத்தின் (ஹெல்சிங்கி—ஆர்) பயன்தரும் அம்சமாகும். மேலும் இது வருங்கால விவாதத்திற்கான நெம்பு கோலை வகை செய்கிறது."

மைக்கல் போர்தியச்ஸ்
கிறிஸ்டியன் ஸயன்ஸ்
மொனிட்டர்
நவம்பர், 1 1977
அமெரிக்கா.

பழைய நொடிக் கதையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது இது; கேள்விக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று சொல்; "உனது மனைவியை அடிப்பதை நிறுத்திவிட்டாயா?" நீங்கள் எதைச் சொன்னாலும், உங்களுடைய மனைவியை நீங்கள் அடித்துள்ளீர்கள் என்பதே முக்கியமான விஷயம்.

சோவியத் அரசாங்கம் சுதந்திரங்களுக்கும் பிற மனித உரிமைகளுக்கும் தன்னை உட்படுத்திக் கொண்டது. 1975ல் ஹெல்சிங்கியில் அல்ல; ஆனால் 1917ல், லெனின்கிராடில், அப்போதைய பெத்ரோகிராடில்; மூன்றாம் தரப்பின் முன் அல்ல, ஆனால் சோஷலிஸப் புரட்சியை ஏற்படுத்தியவர்களும் இந்த அரசை அதிகாரத்தில் அமர்த்தியவர்களுமான அதன் சொந்த மக்களின் முன்.

இந்த வசதிகளும்—பேசும், கூட்டம் கூடும், மனச்சாட்சி, ஆர்ப்பாட்ட — சுதந்திரங்களும் உழைக்க, கல்வி கற்க, சமூகப் பாதுகாப்புக்கான, சொந்தக் காப்புரிமைக்கான—உரிமைகளும் சாதாரண மனித வாழ்வுக்குரிய எல்லா உரிமைகள், சுதந்திரங்களைப் போலவே சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்பில் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளன:-

சோவியத் ஒன்றியத்தில் மனச்சாட்சிச் சுதந்திரமானது 20,000க்கும் அதிகமான வழிபாட்டுத் தளங்கள் மூலம் உத்தரவாதஞ் செய்யப்படுகிறது. இந்த எதார்த்தங்கள் அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரமே விவாதம் சாத்தியமானதும்; அவசியமானதும் கூட, இல்லாவிடில் மேலே 'பங்களிப்பு' வெறும் பிரசாரமாகவே இருக்கும்.

> "மதம் கோட்பாட்டளவில் மறுக்கப்பட்டிருக்கும் இன்றைய சோவியத் யூனியனில் பலர் குறிப்பாக இளம் தலைமுறையினர் உண்மையான கிறிஸ்தவர்களாவர். 58 ஆண்டுகால நாத்திகப் பிரசாரம் மற்றும் மாற்றமுற்ற உற்பத்தி உறவுகளின் நிலைமையில் பாரபட்சத்திற்குப் பின்னரும் மதம் நில விவருகிறது என்ற உண்மை மார்க்ஸிய—லெனினியத் தத்துவத்திற்கு கருத்தாழமுள்ள பிரச்னையை முன்வைக்கிறவு".
>
> கர்தினல் பிரான்ஸ் கோனிக்
> பிராஃங் பர்ட்டர்,
> அல்ஜேமெய்ன்.
> ஆகஸ்ட் 16, 1975
> ஜெ. ச. கு

சோவியத் அரசு மதம் சார் மக்களின் எண்ணிக்கையைப் பதிவு செய்வதில்லை. அது சம்பந்தமான துல்லிதமான புள்ளி விபரமும் கிடையாது. ஆயினும் 14—28 வயதுக்குட்பட்ட பெரும்பாலான

இளம் மக்கள் வெகுஜன ஸ்தாபனமான இளம் கம்யூனிஸ்ட் கழகத்தில் உறுப்பினர்கள் என்பன போன்ற மறைமுகத் தகவல்கள் சமூகவியல் ஆய்வுகள் மூலம் மெய்யான சித்திரத்தைத் தீட்டலாம். மதத்திற்கு அநீதி இழைக்கப்படவில்லை. இதற்குச் சான்று பல திருச்சபைகளும், பள்ளிவாசல்களும் யூதத் திருக் கோயில்களும் வழிபாட்டுத் தளங்களும் செயல்படுவதே.

மார்க்ஸிய—லெனினியத் தத்துவம் முகம் கொடுப்பதாகக் கூறப்படும் பிரச்னையைப் பொறுத்தவரையில், இதற்கான தீர்வு நீண்டகாலத்திற்கு முன்னரே தெரிவிக்கப்பட்டது. மக்களில் பெருந்தொகையினரின் மனோபாவம் மற்றும் உலகக் கண்ணோட்டத்தைவிட உற்பத்தி உறவுகள் வேகமாக மாறும் என்பதை மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனினால் முன்னறியப்பட்டது. மதம்சார் மக்களின் எண்ணிக்கை—சிறியதாகவும் மறைந்து வருவதாகவும் இருந்தபோதிலும் கூட—இன்று வரை இருந்து வருகிறது என்பதற்கு எதார்த்தம் சான்று பகர்கிறது. மதச் சுதந்திரமும் நாத்திகச் சுதந்திரமும் சட்டத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டிருப்பதால் மதத்திலிருந்துவிலகுவதைக்செயற்கையாக விரைவுபடுத்தும் எண்ணம் கிடையாது. சோவியத் ஒன்றியத்தின் பிரஜைகளுக்கு ''எந்தவொரு மதத்தைப் பின்பற்றவும் பின்பற்றாதிருக்கவுமான'' உரிமை உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறது என்றும், குரோதத்தைத் தூண்டுவது தடைசெய்யப்பட்டிருக்கிறது என்றும் அரசியல் யாப்பின் 52வது விதி கூறுகிறது.

மதத்தைப் பின்பற்றும் மக்கள் குறிப்பாக பாப்டிஸ்டுகள் சோவியத் ஒன்றியத்தில் துன்புறுத்தலுக்கு உட்படுவதாக வலியுறுத்தும் ஒரு தீர்மானத்தை அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை 1976 கோடைக்காலத்தில் அங்கீகரித்தது.

மசசூசெட்ஸ் மாநில ஏழாம் நாள் சங்கத்தவரின் நிலை சம்பந்தமான ஒரு தீர்மானத்தை சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் ஏற்கும் என்பது போன்ற ஒரு விஷயத்தை அபரிமிதமான கற்பனையில் கூட ஒருவர் நினைக்க முடியாது. அமெரிக்கக் காங்கிரஸின் பிரதிநிதிகள் தமது சொந்த உள்ளூர் பிரச்னைகளைத் தீர்த்துவிட்டால் நிச்சயம் அவர்களை ஒருவர் வாழ்த்துவார்.

ஆனால், அத்தகைய தீர்மானத்தை அமெரிக்க சட்டவாக்க உறுப்பு எற்பது ஒரு அரசுரிமைமிக்க அரசின் உள்விவகாரங்களில் கொடூரமாகத் தலையிடுவதாகவே சோவியத் மக்கள் எடுத்துக் கொள்கின்றனர். இத்தகைய தீர்மானம் அமெரிக்க வெகு ஜனங்களைத் தவறாக இட்டுச் செல்லப் போவதில்லை என்பதால் இவற்றிற்கு நாம் பதிலளிக்கப் போவதில்லை. ஏனெனில், கிறிஸ்துவ சுவிஷேச பாப்டிஸ்டுகளின் அகில யூனியன் கவுன்ஸிலின் செயலாளர் அலெக்ஸி பிச்கோவ் இத்தீர்மானத்திற்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்: ''இவை கெடுமிடிப்போர் முயற்சியின் அவதூறான கண்டுபிடிப்புகள். எம்மை யாரும் துன்புறுத்தவில்லை. நாம் எவரிடமும் பாதுகாப்புக் கோரவும் இல்லை. சோவியத் அரசியல் யாப்பு ஒவ்வொருவருக்கும் உண்மையான மனச்சாட்சிச் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்கிறது.''

ஜாரிஸ ருஷ்யாவில் வைதீகத் திருச்சபை அரச மதமாக இருந்தது. பாப்டிஸ்டுகள் குரூரமாகத் துன்புறுத்தப்பட்டனர். நிர்வாக சேவை அவர்களுக்கு எட்டமுடியாததாக இருந்தது. அவர்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டனர். பலர் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இந்த நிலைமை சோவியத் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டதும் முடிவுக்கு வந்தது. அரசிலிருந்து திருச்சபையையும் திருச்சபையிலிருந்து பள்ளிகளையும் பிரித்த 1918, ஜனவரி 23ம் திகதிய ஆணையானது ''எந்தவொரு சமயத்தையும் பின்பற்றவும் எதையுமே பின்பற்றாதிருக்கவும் ஒவ்வொரு பிரஜைக்கும்

உரிமை உண்டு'' என்று வரையறுத்தது. மத காரணங்களுக்காக உரிமைகள் மீதான சகல தளைகள் ஒழிக்கப்பட்டன. எந்தவொரு அதிகார பூர்வதாக்கீதும் (கடவுச்சீட்டு, படிவம் அல்லது புள்ளிவிபரத் தாள்) ஒரு நபரின் மத நம்பிக்கையைக் குறிப்பிடுவதில்லை.

கிறிஸ்தவ சுவிஷேச பாப்டிஸ்டுகள் சங்கம் 'பிராட்ஸ்கிய் வெஸ்த்னிக்' என்ற சஞ்சிகையையும் மத நாட்காட்டிகள், பிரார்த்தனை நூல்கள், பக்திப் பாடல்களையும் வெளியிடுகிறது. பழைய, புதிய ஏற்பாடுகள் பெரும் பதிப்புகளில் வெளியிடப் படுகின்றன. மத நூல்கள் எஸ்தோனிய, லெட்சிஸ், ஜெர்மன், ருஷ்ய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றன. அகில யூனியன் கவுன்ஸிலைச் சேர்ந்த வேதாகமப் பாடங்கள் போதகர்களைப் பயிற்றுவிக்கின்றன. பல பாப்டிஸ்டுகள் சோவியத் சமுதாயத்தில் முக்கியமான இடத்தை வகிக்கின்றனர்; நபர்களுக்கு அரசாங்க விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு போரின்போது வீரத்தைக் காட்டியதற்காக விமானப்படைவீரர் ஐ. சட்டலினுக்கு சோவியத் யூனியன் வீரர் விருது வழங்கப்பட்டது. சோஸலிஷ உழைப்பு வீரர் விருது, 1975ல் காலமான எம். மிகைலென் கோவுக்கு வழங்கப்பட்டது.

> ''உங்களின் அரசியல் யாப்பு எல்லா பிரஜைகளுக்கும் மனச்சாட்சிச் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்கிறது எமது பத்திரிகையிலிருந்து நான் வாசிப்பதுமூலம் இது மதச் சார்புள்ள யூதர்களுக்கு பொருந்துவதில்லை என்று என்னால் அனுமானிக்க முடிகிறது. சோவியத் யூனியனில் மிகக் குறைந்த திருக்கோயில்கள் இருந்தால், மதப் போதகர்கள் இல்லாமலிருந்தால் அவர்கள் தமது மதச் சுதந்திரத்தை எவ்வாறு கடைப்பிடிக்க முடியும்?''
>
> ஐசாக் இடெல்சன்
>
> இங்கிலாந்து. பெர்மிங்காம், சோவியத் சஞ்சிகையான நியூ டைம்ஸ்க்கு எழுதிய கடிதத்தில்.

சோவியத் யூனியனில் ஏறத்தாழ 200 யூதமத ஸ்தாபனங்களும், நிரந்தரமாக செயல்படும் 92 திருக்கோயில்களும் உள்ளன; இவை, தமது மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அரசால் வழங்கப்பட்ட கட்டிடங்களில் உள்ளன. ஜுடாயிஸத்தில் நம்பிக்கை கொண்டவர்களால் தெரிவுசெய்யப்படும் அமைப்புகளால் இத்திருக்கோயில்கள் நடத்தப்படுகின்றன. இவற்றின் விவகாரங்களில் அரசு தலையிடுவதில்லை. திருக்கோயில் பேக்கரிகள் ஆண்டுதோறும் 600,000,—700,000 கிலோவுக்கு இடையில் மதசடங்குக்கான மாட்ஸோ ரொட்டியைத் தயாரிக்கின்றன. சுருக்கமாகச் சொன்னல் மதத்தைக் கடைப்பிடிக்கும் யூதர்கள் பொருளாயத ரீதியில் ஆதரவளிக்கத் தயாராக இருக்கும் அளவுக்கு பல திருக்கோயில்களைப் பெற சோவியத் யூனியன் தயாராக உள்ளது.

மாஸ்கோ யூதத் திருக்கோயிலானது மதப் போதகர்களையும், ஊழியர்களையும், தோரா ஓதுவோரையும் பயிற்றுவிப்பதற்கான யெசிவாவை நடத்தி வருகிறது. சிலர் சேரவிரும்புவது வாஸ்தவமே. "இதை பலவந்தமாக செய்யமுடியாது" என்று கூறுகிறார். சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையின் மத விவகாரசபையைச் சேர்ந்த இயோசிப் ஸாபிரோ. "காலஞ்சென்ற மாஸ்கோ யூதமதப்போதகர் லெவின் கூறியது எனக்கு இன்னும் நினைவில் உள்ளது. தனது சொந்தப் பேரனை யெசிவாவில் சேருமாறு முயற்சி செய்தபோது அந்த இளைஞர் எதிர்த்து நின்று; "உண்மையிலேயே விசுவாஸமில்லாத ஒரு மதப் போதகராக நான் மாறுவதை விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

மதப் பற்றுள்ள யூதர்களின் எண்ணிக்கை குறைவு-சமூக வியலாளர்களின் மதிப்பீடுகளின்படி 60,000க்கும் அதிகமானோர் கிடையாது—என்பது உண்மையே. சகல சோவியத் தேசிய இனங்கள், சமுதாயப் பகுதிகளிடையே நாத்திகம் நிலவுவதால் இது புரிந்துகொள்ளக் கூடியதுதான்.

"சோவியத் அமைப்பில், ஒரு யூதராக இருப்பது—யூதத்துவத்தை உறுதிப்படுத்துவதும்—விசுவாசமுள்ள சோவியத் பிரஜையாக இருப்பதிலிருந்து தெளிவாகவே முரண்படுகிறது. இங்குதான், ஏனைய இனக் குழுமங்களுடன் ஒப்பிடுகையில் யூதர்கள் பிரதிகூலத்தை உணர்கின்றனர்."

ஹெட்ரிக் ஸ்மித்,
த ருஷ்யன்ஸ்,
நி. யோ. 1976. ப. 480.

ஒவ்வொரு பத்தாயிரம் சோவியத் யூதர்களில் 350 பேர் கல்லூரி மாணவர்கள். இது நாடுமுழுமைக்குமான சராசரியில் இரண்டு மடங்காகும். எண்ணிக்கையில், சோவியத் தேசியக் குழுக்கள் மத்தியில் யூதர்கள் 12வது இடத்தை வகிக்கின்றனர். கல்லூரி மாணவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் ருஷ்யர்கள், உக்ரேனியர்கள், பைலோருஷ்யர்கள், உஷ்பெக்குகள் ஆகியோருக்கு அடுத்தாற்போல் அவர்கள் ஐந்தாவது இடத்தை வகிக்கின்றனர். சோவியத் யூனியனின் ஜனத்தொகையில் ஒருசதவீதம் தொகைப்படும் யூதர்கள் விஞ்ஞானத் துறையில் ஈடுபட்டுள்ளோரில் 6.1 சதவீதமும், கலையில் 5.2 சதவீதமும், இலக்கியம், பத்திரிகைத் துறையில் 6.5 சதவீதமும் மருத்துவத்தில் 3.4 சதவீதமும் ஆவர்.

சோவியத் யூனியனின் முப்பது லட்சம் யூதர்கள் அநீதிக்கு உட்படுத்தப்படுகின்றனர். இஸ்ரேலுக்கு குடிபெயரும் விருப்பத்தைத் தெரிவித்தால் அடக்க ஒடுக்கப்படுகின்றனர் என்று வியன்னா பத்திரிகையான கூரியர் கோருகிறது.

சோவியத் யூனியனில் 21 லட்சம் யூதர்களே உள்ளனர். 30 லட்சம் அல்ல. 1975ல் 11.700 சோவியத் யூதர்கள் இஸ்ரேலுக்குச் சென்றனர்.

யூத சுயாட்சிப் பிராந்தியத்திலிருந்து ஒருவரும் செல்லவில்லை. ஏனெனில் எவரும் போக விரும்ப வில்லை. சோவியத் ஒன்றியத்தின் உள்துறை துணை யமைச்சர் போரிஸ் சுமிலினின் கருத்துப்படி 1957ல் இஸ்ரேலுக்கான குடியகழ்வு 1974ன் எண்ணிக்கை யில் விபரத்திற்கு அரைவாசியாகவும் 1973ன் எண் ணிக்கையில் முக்கால்வாசியாகவும் இருந்தது. வெளியேறும் அனுமதிக்காக விண்ணப்பிப்போரில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் போரினால் பிரிந்து போன குடும்பங்களுடன் ஒன்றிணையும் விருப்பத் தால் உந்தப்பட்டவர்களாவர். இந்த ஒன்றிணையும் நிகழ்வு போக்கு இப்போது முடிவுக்கு வருகிறது. இது வெளியேற விரும்பும் மக்களுடைய எண்ணிக் கையின் பெரும் வீழ்ச்சியை விளக்குகிறது.

போரிஸ் சுமிலின்னுடன் நொவஸ்தி செய்தி நிறுவனம் நிகழ்த்திய பேட்டி இதோ!

கே. சோவியத் ஒன்றியத்திலிருந்து குடியகல் வதற்கான சட்டங்கள், விதிகள் ஏதாவது உள்ள னவா?

ப. ஆம். சோவியத் ஒன்றியத்தின் அமைச் சரவையினுடைய 1970, செப்டம்பர் 22ம் திகதிய இல. 801ன்படி அங்கீகரிக்கப்பட்ட "சோவியத் ஒன்றியத்திற்குள் பிரவேசிக்கவும், வெளியேறவும் மான சட்டம்" இது அரசாங்க ஆணைகள், தீர்மா னங்களின் ஒரு திரட்டாக வெளியிடப்பட்டது. தற்செயலாக அது குடியகழ்வு ஒழுங்கு விதிகளை சுருக்கியதன் மூலம் சமீபத்தில் திருத்தப்பட்டது.

கே. வெளியேறுவதற்காக ஒருவர் என்னென்ன தாக்கிதுகளை, யாருக்கு சமர்ப்பிக்கவேண்டும்?

ப. வெளியேற விரும்பும் ஒரு நபர் தக்க நிரப்பப்பட்ட படிவங்களோடு ஸ்தல உள்துறை அலுவலகத்திற்கு விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக் கிறார்.

கே. குடியகல்வு குறித்து கட்டுப்பாடுகள் ஏதாவது உளவா?

ப. குடிகல்வு மற்றும் வெளியேற்றம் சம்பந்தமான சோவியத் சட்டங்களும் விதிகளும் 1966, டிசெம்பர் 16ம் திகதியன்று ஐ. நா. பொதுச்சபையால் ஏற்சப்பட்ட சிவில் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தத்திற்கு முற்றிலும் இசைவானவையாக உள்ளன. சில வேளைகளில் நாம் பயன்படுத்தும் கட்டுப்பாடுகள் இந்த ஒப்பந்தத்தின் விதிகளிலிருந்து நேரடியாக முகிழ்பவையாகும். இவை குடியகலவும், மற்றும் ஒரு நாட்டில் நிரந்தரமாக வசிக்கவுமான உரிமையானது தேசிய பந்தோபஸ்து, பொது ஒழுங்கு பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கங்கள் அல்லது பிறரின் உரிமைகள், சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு அவசியமாயின் கட்டுப்படுத்தப்படலாம் என திட்டவட்டமாக தெரிவிக்கின்றன.

கே. நடைமுறையில் இது எதை குறிப்பிடுகிறது.

ப. சில விஷயங்களை குடும்ப விவகாரங்கள், குறிப்பாக பொருளாயத உறவுகள் பற்றிய பிரச்சினைகளை தீர்க்கும்வரை ஒத்திப் போடுகிறோம். பிரச்சனைக்குரிய ஒரு நபர் அரசு இரகசியமான தகவலை வைத்திருந்தால் அல்லது முக்கிய இராணுவ பயிற்சியை சமீபத்தில் பெற்றிருந்தால் இதே போன்று அவருக்கு நடக்கலாம்.

கே. இது போன்ற பல விஷயங்கள் உள்ளனவா?

ப. வெளியேறுவதற்கு அனுமதிகோரி விண்ணப்பித்த மிகப்பெரிய தரத்தினரான யூதர்களை எடுத்துக் கொன்டால் 1976 ஜனவரி 1ன் படி மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையில் 1. 6 சதவீதத்தினருககு மாத்திரமே அனுமதி தவணையிடப்பட்டது.

கே. விண்ணப்பதாரர் அனுமதியை பெறவில்லை எனக்கொண்டால் அவர் எப்போதுமே வெளியேற முடியாது என்று அர்த்தமா?

ப. அந்நபர் குறிப்பிட்ட காலத்திற்கு தரம் இலந்தவரானதும் அல்லது மேற்சொன்ன குடும்ப விவகாரங்கள் தீர்க்கப்பட்டதின் பின்னர் அவருடைய விண்ணப்பம் மீண்டும் பரிசீலிக்கப்படுகிறது. 1975ல் 300க்கும் அதிகமானோர் மீண்டும் அனுமதி பெற்று வெளியேறினர்.

கே. குடியகல்வதற்கான விண்ணப்பம் வேலையை அல்லது சமூக அந்தஸ்தைப் பாதிக்கிறதா?

ப. ஒரு விதியாக இல்லை. பாதுகாப்பு நிறுவனங்களிலும் குறிப்பிட்ட ஆராய்ச்சிக் கழகங்களிலும் வேலை செய்த விண்ணப்பதாரர்கள் இதற்கு விலக்கு. அத்தகைய விஷயங்களில் தொழிற்சங்கத்தின் அனுமதியுடன் தொழிற்சட்டத்திற்கு இசைவாக அத்தகைய நபர்கள் பொறுப்பு குறைந்த வேலைகளுக்கு மாற்றப்படலாம். இத்தகைய பெரும்பாலானோர் ஆள்வலு பற்றுக்குறை காரணமாக, விண்ணப்பம் செய்வதற்கு முன்னமே தமது சொந்த விருப்பத்தின்பேரில் வேலையை மாற்றிக் கொள்கின்றனர்.

கே. யார், ஏன் வெளியேறுகிறார்?

ப. பெரும்பாலான விஷயங்களில் முக்கிய நோக்கம் ஒருவரின் குடும்பத்தோடு சேர்ந்து கொள்வதே. இவர்கள் போர் மற்றும் நாஜி ஆக்கிரமிப்பின்போது பிரிந்த குடும்பங்களையுடைய பெரும்பாலான யூதர்களே. மற்றொரு காரணம் வேற்று நாட்டுப் பிரஜையை மணப்பதாகும். சமீப ஆண்டுகளில் 5500 சோவியத் பிரஜைகள்—இவர்களில் 544பேர் ஆண்கள்—110 வெவ்வேறு நாடுகளுக்குத் தம்பதி சகிதம் சென்றுள்ளனர். சுமார் 2000 பேர், வெளிநாட்டுப் பிரஜைகளை மணந்துள்ளனர்: இவர்களுக்கு வெளியேற விண்ணப்பிக்கும் சகல உரிமையும் இருந்தபோதிலும் இன்னும் விண்ணப்பிக்கவில்லை. ஏனைய விருப்பங்கள் விதிவிலக்கானவை.

கே. எத்தனை யூதர்கள் இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்?

ப. 1945முதல் 1977, ஜூலை 1 வரையில் மொத்தம் 141, 600 பேர் இஸ்ரேலுக்கும், அது ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் பாலஸ்தீனத்திற்கும் வெளியேறியுள்ளனர்.

கே. இந்தப் புள்ளி விபரம் ஒப்பீட்டளவில் பெரியதா, சிறியதா?

ப. இதே காலகட்டத்தின்போது சுமார் 15 இலட்சம் யூதர்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்துள்ளதைக் கருத்திற் கொள்கையில் இது அதிகமானதெனத் தோன்றுது.

கே. குடியகல்வு விஷயங்களிலிருந்து எழும் அடிப்படைப் பிரச்னைகள் எவை என நீங்கள் நினைக்கிறீர்கள்?

குடியகல்வு பல உயிர்களைப் பாதிக்கிறது. இயல்பிலேயே பல பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. பின்வரும் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். நாம் அனைவரும் குடும்பங்களின் ஒன்றிணைவையே ஆதரிக்கிறோம். சிலவேளைகளில் இது இருந்துவரும் குடும்ப பிணைப்புகளுடன், குழந்தைகள் தமது பெற்றோரை விட்டுப் பிரிவது அல்ல, இதற்குமாறாக நிகழ்வது, ஒருவர் மற்றவரை விவாகரத்து செய்வது போன்றவற்றுடன் முரண்படுகிறது. இத்தகைய விஷயங்களில், தங்கிவிடுகின்ற சோவியத் பிரஜைகளின் நலன்களை நாம் இயல்பிலேயே பாதுகாக்க முயல்கிறோம். குடும்ப உறவுகள் போன்ற சிக்கலான விஷயங்களை முடிவு செய்வதில் முற்றிலும் ஸ்தூலமாக இருப்பது எளிதல்ல. தவறான அழைப்பிதழ்கள் எனப்படுவது பற்றி சில வார்த்தைகள் கூறவேண்டும் என நான் உணர்கிறேன். பல முத்திரைகள், கையொப்பங்களைப் பரிசீலிக்கையில் கௌரவமுள்ள இஸ்ரேலிய அரசாங்க, நிர்வாக அலுவலகங்கள், இஸ்ரேலிய வெளிநாட்டு அலுவலகத்தின் தகவல் பிரிவு போன்றவை இத்தகைய ''தாக்கீது'' களை உருவாக்குகின்றன. ஒருவருக்கு ஒருவர் உறவு இல்லாதவர்களுக்கும் முற்றிலும்அயலவர்களுக்கும் இவை வருவது எங்ஙனம் சாத்தியம்?

இவ்வாறு, குடும்பங்களை ஒருங்கிணைக்கும் ஆழ்ந்த மனிதாபிமான நோக்கம்—இதையே ஐ.நா மனித உரிமைகள் உடன்பாடும் ஹெல்சிங்கி இறுதித் தாக்கீதும் வேண்டுகின்றன—பரிவர்த்தனை நிலையாகிவிட்டது. இத்தகைய நடவடிக்கைகளை, குடும்ப ஒருங்கிணைவு பிரச்னை பற்றிய சோவியத் அரசின் மனிதாபிமான மனோபாவத்தை தூஷிக்கும் முஸ்தீபுகளைவிட வேறு எதுவாகவும் கருதமுடியாது.

> "உங்கள் நாட்டின் மாணவர்கள் கோடைக்கால விடுமுறையின்போது நிர்மாணத் தளங்களில் வேலை செய்வதற்காக அனுப்பப்படுகின்றனர் என்று நான் வாசித்திருக்கிறேன். அவர்களுக்காக நான் உண்மையிலேயே வருந்துகிறேன். பல மாத காலப் படிப்பிற்குப் பின் ஓய்வெடுக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாதா?"
>
> பிலிப் பியூனல்,
> ஜெனீவா

உண்மைதான். குழுக்களாக ஒன்றுபட்டுள்ள பல மாணவர்கள் கோடைக் காலத்தில் நிர்மாணத் தளங்களுக்குச் செல்கின்றனர். அத்தகைய குழுக்களை நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் காணலாம்.

மாணவர்கள் தமது கோடைக்கால வேலையை ஓர் "உழைப்புப் பயிற்சி" என அழைக்கின்றனர். ஆனால் இந்த வேலை முற்றிலும் சுயவிருப்ப அடிப்படையில் செய்யப்படுகின்றது. மேலும், ஒரு நிர்மாணக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான உரிமை முயன்று பெறவேண்டியதாகும். சமூக முனைப்பும் பள்ளி முன்னேற்றமும் கணக்கிலெடுக்கப்படுகின்றன. குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அத்தகைய முதலாவது குழுக்கள் 15 ஆண்டுகளுக்கு முன்னர் உரு

வாக்கப்பட்டன; இன்று சுமார் 20 சதவீத மாணவர்கள் இக்கோடைக்கால நிர்மாணப் பணியில் பங்கு கொள்கின்றனர்.

ஒரு மாணவர் நிர்மாணக் குழு திட்டவட்டமான கடமைகள், பொறுப்புகளையுடைய சுயேட்சையான பிரிவு: இதற்கான பொறுப்பை எல்லா உறுப்பினர்களும்—தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும்—பகிர்ந்து கொள்கின்றனர். ஒவ்வொரு குழுவுக்கும் தலைவர் ஒருவர் தலைமை தாங்குகிறார். அத்தகைய குழுக்களில் மாணவர்கள் ஸ்தாபன அனுபவத்தையும் முன்முயற்சியையும் பெறுகின்றனர்; இது வருங்கால நிபுணருக்குப் பயனுள்ளதாகும்.

சைகல் ஆமூர் புகையிரதப் பாதை, காமா, வோல்கா நதிக்கரைகளில் உள்ள மோட்டார் தொழிலகங்கள், உக்ரைனிலுள்ள செர்னோபில் அணுமின் நிலையம், சுக்கோத்காவிலுள்ள பிலிப்பினோ அணுமின் நிலையம், மத்திய ஆசியாவிலுள்ள ஒஸ்கொல் மின்சார உருக்கு ஆலை, தூரகிழக்கு விஞ்ஞான கேந்திரம் போன்ற நிர்மாணத் தளங்களில் மாணவர்கள் வேலை செய்கின்றனர். ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டகாலத்தின்போது மாணவர் குழுக்கள் ஆற்றிய பணியின்பெறுமதி 500 கோடி ரூபிள்கள் என மதிப்பிடப்பட்டது, மாணவர்களும் நல்ல சம்பாத்தியத்தைப் பெற்றனர்.

தற்செயலாக, கோடைக்காலத்தில் எமது மாணவர்கள் செய்யும் வேலைவகை நிர்மாணம் மாத்திரமல்ல. அவர்கள் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், புகையிரதங்கள், மருத்துவமனைகளில் வேலை செய்வதைக் காணமுடியும். மரக்கறி, பழ அறுவடையில் அவர்கள் உதவுகின்றனர்: மென், உணவுத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். மேலும் அதிகமான விசேடக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன, தொலைத் தொடர்புக் கழக மாணவர்கள் கிராமங்களில் தொலைபேசிகளைப் பொருத்துகின்றனர், இயந்திரவியல் கல்லூரி மாணவர்கள் கால்நடைப் பண்ணைகளில் சாதனங்களை

இணைக்கின்றனர். எதிர்காலக் கட்டிடக் கலைஞர்கள் நிர்மாண, புனரமைப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

ஆயினும், கோடைக்காலத்தின் ஒரு பகுதியின் போதே மாணவர்கள் வேலை செய்கின்றனர்; எஞ்சிய பகுதியில் ஓய்வெடுக்கின்றனர். அவர்கள் தமது பெற்றோருடன் தங்கியிருக்கின்றனர், பனிச்சறுக்குப் பயணங்களை மேற்கொள்கின்றனர், விடுமுறை இல்லங்கள், தொழிற்சங்க ஆரோக்கிய தலங்கள் அல்லது விளையாட்டு முகாம்களுக்குச் செல்கின்றனர்.

> ருஷ்யர்கள் பெருமளவுக்கு அரசியல் சார்பற்ற மக்கள்—லெனின் பற்றியும், சோஷலிஸத்தின் ஈடிணையற்ற சாதனைகள் பற்றியுமான தளர்வற்ற கட்சிப் பிரசாரத்தில் அவர்களது முக்கிய பாதுகாப்பு அக்கறையின்மை தான்.''
>
> ஹெட்ரிக் ஸ்மித்
> த ருஷ்யன்ஸ்
> நி. யோ. 1976-ப. 283

ஒரு விவாதக்கலையிலான சாதாரண வாதம் திட்டவட்டமான பிரகடனமாகும். திரு. ஸ்மித்துடன் போட்டியிடும் நாம் கூட, சோவியத் மக்கள் தான் உலகிலேயே அரசியலில் தீவிரமானவர்கள் என்று பிரகடனம் செய்ய முடியும். ஆனால், புள்ளி விபரங்களை இதில் இடம்பெற விட்டுவிடுவோம்.

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்துக்குக் கடைசியாக நடைபெற்ற தேர்தலில் 99 சதவீதத்திற்கு சிறிது அதிகமானோர் வாக்களித்தனர். ஒவ்வொரு சோவியத் குடும்பமும் சராசரியாக மூன்று பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்துகின்றது. இவற்றில் முதலாவதாக இருப்பது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி பத்திரிகையான 'பிராவ்தா' ஆகும். லெனினைப் பற்றியும் ''சோஷலிஸத்தின் ஈடிணையற்ற சாதனைகள்'' பற்றியும் குறிப்பிடும் இதே பத்திரிகை கம்யூனிஸ நிர்மாணத்

தின் நிகழ்வுப் போக்கில் குறை நிறைகளையும் சுட்டிக் காட்டுகிறது. மக்களின் அரசியல் பிரக்ஞைக்கு அதியுயர் சான்று 1977-1978ல் சோவியத் ஒன்றியத்தினதும், ஒன்றியக் குடியரசுகளினதும் அரசியல் யாப்பு நகல்கள் மீது நடைபெற்ற நாடுதழுவிய விவாதமாகும். சோவியத் யூனியனினுடைய அடிப்படைச்சட்ட நகல் மீதான விவாதத்தில் 14கோடிக்கு அதிகமான மக்கள்—நாட்டின் வயதுவந்த மக்களில் ஐந்தில் நான்கு பங்கினர்—பங்கு கொண்டனர், அரசியல் யாப்புக் குழு நகல் மீதான திருத்தங்கள் குறித்து சுமார் 400,000 ஆலோசனைகளையும் பிரேரணைகளையும் பெற்றது.

> ''புரட்சிக்கு முன்னர் உறுதியான தேசிய நேசபக்தி ருஷ்யாவின் ஒரு தரக் குறியீடாக இருந்தது. முரணுரை இன்று லெனினும் பிற புரட்சிகரத் தலைவர்களும் - இவர்களில் மிகச் சிறுபான்மையானோரே ருஷ்ய இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மரபை உடைக்க முற்பட்டனர் என்ற அம்சத்திலேயே தங்கியுள்ளது. ''நாம் தேசபக்த விரோதிகள்'' என்று 1915ல் லெனின் பிரகடனஞ் செய்தார்.
>
> ஹெட்ரிக் ஸ்மித்,
> தருஷ்யன்ஸ், ப. 304

புஷ்கின் புரட்சிக்கு முந்திய ருஷ்யாவின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களின் பாரம்பர்யத்தை முன்னெடுத்துச் சென்றார். ''க்வாஸ்'' தேசபக்தி எனப்படும், எல்லாமே ருஷ்யனாக இருப்பது சிறந்தது; உண்மையானது ஏனெனில் அது ருஷ்யன் ஆகும்'' க்வாஸ் குளிர்பானமாக இருந்தாலும் வொட்கா மதுவாக இருந்தாலும் அல்லது திருச்சபை வாழ்க்கை முறையாக அல்லது ஆசாங்க முறையாக இருந்தாலும்—என்று வாதிடும் கொடூரமான, ஆரவாரமிக்க வகையைச் சார்ந்த தேசபக்தியை மறுதலிக்கும் பாரம்பர்யத்தை முன்

னெடுதுச் சென்றார். ருஷ்யாவின் எதேச்சாதிகாரிகளும் அவர்களின் அரசாங்கங்களும்—குறிப்பாக, முதலாம் உலகப் போர் வெடித்த வேளையில் கடைசி ஜாரான இரண்டாம் நிக்கலஸின் ஆட்சி;—இவ்வகை தேசபக்தியை விதைப்பதைத் தமக்கு அனுகூலமாகக் கண்டனர். இப்போரில் ருஷ்யா பங்கேற்கும் கருத்தை லெனின் ஆதரிக்கவில்லை. அதை ருஷ்யத் தொழிலாளர், விவசாயிகளின் உண்மையான தேசிய, வர்க்க நலன்களுக்கு அநீதியானதாகவும் விரோதமானதாகவும் அவர் கருதினார்.

ஏனைய நாடுகள், சேசங்களுக்கான ஆழ்ந்த மரியாதையுடன் பின்னிப்பிணைந்துள்ள உண்மையான தேசபக்தியைப் பொறுத்தவரையில், சிறப்புக்களை மாத்திரமன்றி, ஒருவரின் சொந்தத் தேசிய இயல்பு, கலாசாரம், சமூக அமைப்பு மற்றும் பாரம்பர்யங்களின் பிழைகளையும் ஒருவர் நிதானமாகக் கணக்கிலெடுக்கிறார். அத்தகைய தேசபக்தியை லெனின் உறுதியாக ஆதரித்தார். முழுமையாகவும் சரியாகவும் விளங்கிக் கொள்ள விரும்பிய அவர் இப்பிரச்னையைத் திரும்பத் திரும்ப விவாதித்தார்.

''வர்க்க உணர்வு கொண்ட மகத்தான ருஷ்ய பாட்டாளிகளே; தேசிய மாண்புணர்வு எமக்கு விரோதமானதா?'' ''என்று அவர் 1914ல் கேட்பார் ''நிச்சயமாக இல்லை! நாம் எமது மொழியையும் எமது நாட்டையும் நேசிக்கிறோம். அதன் உழைக்கும் மக்களை (ஜனத்தொகையில் பத்தில் ஒன்பது) ஜனநாயக, சோஷலிஸ பிரக்ஞை மட்டத்திற்கு உயர்ந்த நாம் எம்மாலான அனைத்தையும் செய்துவருகிறோம். நாம் முழுமையான தேசிய மாண்பைக் கொண்டவர்கள், அதன் காரணமாக, நாம் குறிப்பாக எமது அடிமைத்தனம் மிக்கக் கடந்த காலத்தை வெறுக்கிறோம்.''

''புத்தகங்கள் பற்றிய ஈடிணை
யற்ற சோவியத் கிராக்கிக் கற்பனை
மணல்மீது கட்டப்பட்டிருக்கிறது.''

நியூயே சூரிச்சர் செய்துங்,
ஜூலை 1976, ஸ்விட்சர்லாந்து.

சோவியத் சஞ்சிகையான வி மீர்னிக் (புத்தக உலகம்) கின் ஆசிரியர் யூரி ஃபிலோனேவிச் கூறுகிறார்:

சோவியத் ஒன்றியத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் 200 கோடிப் பிரதிகளைக் கொண்ட 80,000 நூல்கள் மொத்தமாக வெளியிடப்படுகின்றன. இந்தப் பெரும் தொகையில் 88சதவீதம் புத்தக சாலைகள் மூலம் சில்லறைக்கு விற்கப்படுகின்றன; எஞ்சியிருப்பவை பல்வேறு நூலகங்களுக்குச் செல்கின்றன.

எந்தவொரு மேலை நாட்டையும் விட சோவியத் ஒன்றியத்தில் அதிகமான நூல்கள் வாங்கப் படுகின்றன. தற்போது முன்னணி பதிப்பகங்கள் வெளியிடும் மொத்தப் பிரதிகளில் 1.1 சதவீதமும், பல்வேறு பிராந்திய, குடியரசுப் பதிப்பகங்கள் வெளியிடும் மொத்தப் பிரதிகளில் 2.2 சதவீதமும் மாத்திரமே புத்தகக் கடைகளில் இருப்பில் உள்ளன. ஆயிரக் கணக்கான தலைப்புக்களில் சில, பிழையான திட்டமிடல், போதிய விளம்பரமின்மை காரணமாக புத்தகக் கடைகளில் தூசிப்படிந்திருக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை.

உரை நடை நூல்கள் குழந்தைப் புத்தகங்கள் உட்பட—40 சதவீதம் அச்சிடப்படுகின்றன. மொத்த அச்சில் மேலும் 40 சதவீதம் பாடசாலை மற்றும் பல்கலைக் கழகப் பாடநூல்களுக்கு உரியவை ஏனெனில் ஒவ்வொரு மூவரிலும் ஒருவர் படிக்கிறார்-20 சதவீதத்திற்குச் சிறிது அதிகமானவை சமூக, அரசியல், விஞ்ஞான, தொழில் நுட்ப மற்றும் பிற நூல்களாகும். பதிப்பிக்கப்படும் தலைப்புக்கள், பிரதிகளின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரிக்கிறது. 1970க்கு முன்னரான ஐந்தாண்டுகளில் மொத்தம் 227 கோடி பிரதிகளாகவும், அடுத்த ஐந்தாண்டுகளில் இத்தொகை 300 கோடி பிரதிகளையும் தாண்டி இருந்து; 1980ல் முடியவுள்ள ஐந்தாண்டுகளில் மொத்த அச்சுப் பதிவு இன்னும் பெருமளவினதாக இருக்கும். பண்டைய நூல்களும்

நவீன சோவியத், வெளிநாட்டு எழுத்தாளர்களின் நூல்களும் 50,000க்கும் 1,000,000க்கும் இடைப் பட்ட பிரதிகளில் வெளியிடப்படும்,

''மரபு நூலக'' வரிசை நூல்களை வெளியிடுவதிலான ஆயத்தங்கள் முன்னேறி வருகின்றன. இது 200 தொகுதிகளைக் கொண்ட ''உலக இலக்கிய நூலக'' நூல் வரிசை பூரணமடைந்தவுடன் ஆரம்பமாகும். தாந்தே, செர்வாண்டெஸ், ஷேக்ஸ்பியர், வோல்டயர், பைரன், கோதே, பால்சாக், ஹ்யூகோ, ஸ்டெந்தல், ஸோலா, சார்ல்ஸ் டிக்கன்ஸ். மார்க் ட்வைன், வோர்ட்ஸ்வர்த் போன்றோரின் நூல்கள்—அவர்களின் சொந்த நாட்டைவிட சோவியத் ஒன்றியத்தில் பெரும்பகுதிகளாக தொடர்ந்து வெளியிடப்படுகின்றன,

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சோவியத் பதிப்பகங்கள் அமெரிக்க நூலாசிரியர்களின் 7,000. பிரெஞ்சு நூலாசிரியர்களின் 6,000 பிரித்தானிய எழுத்தாளர்களின் 4,500 இத்தாலிய எழுத்தாளர்களின் 1000 தலைப்புக்களை கொண்ட நூல்களை 60 கோடிக்கும் அதிகமான பிரதிகளில் அச்சிட்டுள்ளன. இதே காலகட்டத்தில் அமெரிக்க, பிரித்தானிய பதிப்பகங்கள் சோவியத் நூலாசிரியர்களின் 500 நூல்களையும் பிரெஞ்சு, இத்தாலிய நிறுவனங்கள் முறையே 600, 400 நூல்களை மாத்திரமே வெளியிட்டன. ஹெல்சிங்கி மகாநாட்டுக்கு பின்னர் வெளிநாட்டு எழுத்தாளர்களின் நூல்களை சோவியத் யூனியன் அதிகமாக வெளியிட்டு வருகிறது. இப்போது ஒவ்வொரு ஆண்டும் 40க்கும் மேற்பட்ட அயல் மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்று 25 கோடி பிரதிகளில் 8,000 நூல்கள் வெளியிடப் படுகின்றன. கலாசார பரிவர்த்தனைகள் சம்பந்தமாக ஹெல்சிங்கி இறுதி தாக்கீதுகளினுடைய 3வது பகுதிக்கு சோவியத் வெளியீட்டாளர்களின் பங்கு இத்தகையது தான்.

> ''சோவியத் மக்கள் தமது தினசரி கவலைகளை மறக்க முடியும் என்பதற்காகவே கலையரங்கங்களுக்குச் செல்ல விரும்புகின்றனர். பிரவேசச்

சீட்டுக்களுக்காக கியூ வரிசையில் திரளுகின்றனர். இதற்கான செலவு கூடுதலானதாகும். பெக்கட், அயனேஸ்கோ போன்ற நாடக ஆசிரியர்களை அவர்களுக்குத் தெரியாது. எந்தக் குழுவில் சேர்வது என்பதை நடிகர்கள் தெரிவுசெய்ய முடியாது.

கய் டியூமூர்,
லே நோவெல்
ஒப்சர்வேச்சர், 1976, மே-பாரிஸ்.

இப்பத்திரிகை கொடுத்த காரணத்திற்காக மாத்திரமே சோவியத் மக்கள் கலையரங்குக்குச் சென்றிருந்தால் நாடக அரங்குகள் வெறுமனே இருந்திருக்கும். ஏனெனில் பெரும்பாலான நாடகங்கள் சமகால தலைப்புக்களை உடையவை. உண்மையில் ஒரு நாடகம் பற்றிய மக்களின் பாராட்டு, ஒழுக்கம், தத்துவார்த்தம், சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளின்பால் நாடக குழுக்கள் எவ்வாறு ஆர்வத்தோடும் தகுதியோடும் செயல்படுகின்றன என்பதன் மீது சார்ந்திருக்கின்றது. இவ்வாறு ஓராண்டிற்கு மேலாக ஐம்பதிற்கும் அதிகமான அரங்குகளில் வெற்றிகரமாக நடைபெற்றுவருவது அலெக்சாந்தர் கெல்மானின் ''கட்சிக் குழுவின் கூட்டம்'' ஆகும். அதன் திரைப்படமான ''தி போனஸ்'' பாரிஸில் காட்டப்பட்டது. இது அங்கே சாதாரண மனிதநேய திரைப்படமாக வரவேற்கப்பெற்றது. ஒரு தொழிலாளர் குழுவிற்கும், ஒரு பெரும் தொழிற்துறை திட்டத்தின் தலைவருக்கும், இடையே நடைபெறும் கடுமையான மோதலைச் சுற்றி இக்கரு சுழல்கிறது. அவர்கள் இத்தலைவரை மோசமான அமைப்புக்காகவும் குறைந்த வேலைத் தரத்திற்காகவும் குற்றம் சுமத்துகின்றனர். இது போன்ற நாடகங்கள் பல உள்ளன. இவையின்றி மாஸ்கோ அல்லது மாகாணங்களில் உள்ள சோவியத் ஒன்றியத்தின் 560 நாடக அரங்குகளில் ஒன்றின் இயக்கத்தையாவது நினைத்து பார்க்க முடியாது.

பெரும்பாலான அரங்குகளுக்கு ஆகக்கூடிய கட்டணம் 1.5 ரூபிள்களுக்கு மேற்படுவதில்லை அதே சமயம் போல்சோயில் மிகச் சிறந்த ஆசனத்திற்குச் செலவு 3.5 ரூபிள்கள் அல்லது சுமார் 20 ஃபிரரங்குகள்; (பாரிஸ்கலையரங்கில் 100—150 ஃபிரரங்குகளோடு ஒப்பிடுகையில்) பெக்கெட்டும் அயோனெஸ்கோவும் போதியளவு புகழ்பெற்றவர்கள். அவர்களின் நாடகங்கள் ''அயல்மொழி இலக்கியம்'' என்ற சஞ்சிகை மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. சோவியத் நடிகர்கள் அந்தக் குழுவில் சேர்வதென்பதை சுதந்திரமாக தெரிவு செய்யலாம். ஏனெனில் பெரும்பாலான மாஸ்கோ நடிகர்கள் ஏதாவது ஒரு காலத்தில் நாட்டின் பிற பகுதிகளிலிருந்து வந்தவர்களாவர். இவர்களில் உலகம் புகழ்பெற்ற இனுக்கெந்தி ஸ்மோக்துனேஸ்கியும் அடங்குகிறார்.

''சமீபத்தில் நொவோசி பிர்ஸ்கிலுள்ள அகடம்கோரோடொகில் சில மாதங்களை கழித்ததன் பின்னர், சோவியத் ஒன்றியத்தில் உள்ள விஷேட பள்ளிகளில் நான் ஆர்வம் காட்டினேன். இத்தகைய விஷேச பள்ளிகள் நிலவுவதற்கான முக்கிய காரணங்கள் தேசிய தேவைகளும் சமூக கடமையுமே என்று குறிப்பிடப்பட்டது. எனது அனுபவம் முக்கியமான ஒரு மூன்றுவது காரணத்தைப் பிரேரிக்கிறது. பாடசாலை செல்லும்வயதையுடைய குழந்தைகளின் விஞ்ஞான பூர்வ பெற்றோரிடம் நான் பேசினேன். அவர்களின் பெற்றோருக்குரிய விருப்பங்கள் தேசிய அல்லது சமூகத் தேவைகளின் பாற்பட்டதாக இருக்கவில்லை. வளர்ந்து வருவதும் சலுகை பெற்றதுமான நடுத்தர வர்க்க அபிலாஷைகளாக, தமது குழந்தை

களுக்கு மிகச் சிறப்பானவற்றை பெற்றுக் கொடுப்பனவையாக அவை சாதாரணமாக தோன்றின.''

டாக்டர் ஜி. போர்லோ.
த டைம்ஸ்,
செப்டெம்பர் 20, 1975
லண்டன்

நொவோஸிபிர்ஸ்கி நகர உழைக்கும் மக்கள் பிரதிநிதிகள் சோவியத்தின் நிர்வாகக் குழுத் துணைத் தலைவர் டாக்டர் லியோனிட் கொலெஸ்னிக்கோவ். ''டாக்டர் போர்லே கண்டுபிடித்த சலுகை பெற்றவர்களுக்கு மாத்திரமன்றி எமது குழந்தைகள் அனைவருக்குமே சிறப்பானதை செய்ய நாம் முயல்கிறோம். 1959 அளவில் ருஷ்ய சமஷ்டியின் அமைச்சரவை ஆணை மூலம் இரண்டாந்தரப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இங்கு பல பாடங்களில் அந்நிய மொழியில் போதிக்கப்பட்டன. இப்பள்ளிகள் தமது பட்டதாரிகளுக்கு அந்நிய மொழியொன்றில் வேலைசெய்யும் அறிவைக் கொடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டன...விசேட பள்ளிகளின் ஸ்தாபிதம் தேசிய பொருளாதார தேவைகளால் உந்தப்பட்டது. டாக்டர் போர்லே எழுதுவதைப்போல, ''அபிலாஷையுள்ள பெற்றோர்கள்'' இதில் இயல்பிலேயே எந்தவித பாத்திரத்தையும் வகிக்கவில்லை. எமது நாட்டின் பிற பகுதிகளைப் போலவே நொவோஸிபிர்ஸ்கிலும் பல விசேட பள்ளிகள் உள்ளன. ஆனால், ''வசதிபடைத்தவர்களின்'' குழந்தைகளுக்காக அல்லவே அல்ல.

''இதோ சில புள்ளி விபரங்கள்; பல பாடங்கள் ஆங்கிலத்தில் போதிக்கப்பட்டு வரும் 130ம் இலக்க இரண்டாந்தரப் பள்ளி அகாடெம்கோரோதொக்கில் அமைந்துள்ளது. இங்கு தொழிற்சாலைகள் அல்லது ஆலைகள் கிடையாது. பல விஞ்ஞானத் தொழிலாளர்களே உள்ளனர். உண்மையில், இப்பள்ளிப் பிள்ளைகள் முக்கியமாக விஞ்ஞானிகள், தொழிலாளர்களின் குழந்தைகளே. தொழிலாளரின் குழந்தைகள் 5 சத வீதம் மாத்திரமே. ஆனால்,

நகரின் தொழில் பகுதியில் அமைந்துள்ள 70ம் இலக்கப் பள்ளியில் பல பாடங்கள் பிரெஞ்சு மொழியில் போதிக்கப்படுகின்றன இங்கு தொழிலாளர்களின் குழந்தைகள் 257, ஊழியரின் குழந்தைகள் 261. நொவோஸிபிர்ஸ்கிலுள்ள நாடக, இசை, கலாசாரப் பள்ளிகளில் 1974ல் அனுமதிக்கப்பட்ட 690 மாணவர்களில் 484 பேர் தொழிலாளர், விவசாயிகளின் பின்னணியைக் கொண்டவர்களாவர். நகர இசைப்பள்ளி மாணவர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானேர் தொழிலாளரின் குழந்தைகள். எமது பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கும் கொள்கையானது ஏதாவதொரு பாடத்தில் ஆர்வமுள்ளவர்களை அனுமதிப்பது என்பதே, நொவோஸிபிர்ஸ்க் அரசபல்கலைக்கழகத்தைச்சேர்ந்த விசேடதர உயர் கணிதவியல் மற்றும் பௌதிக விடுதிப் பள்ளியைப் பற்றி சில வார்த்தைகள்.

''இந்தப் பள்ளி ஒரு புதிய வகையான கல்வி நிறுவனம். வருடாந்த மாணவர் போட்டியில் வென்ற இளைஞர்களை நாம் சேர்க்கிறேம். விசேடமாக விரிவுபடுத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி போதனை நடத்தப்படுகிறது; இது ஏறத்தாழ பல்கலைக்கழகப் படிப்புடன் சமமானவையாகும். இங்கு பேரவையாளர்கள், பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்களால் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. சோவியத் விஞ்ஞானப் பேரவையின் சைபீரியப் பிரிவின் ஆராய்ச்சி ஊழியர்கள், பல்கலைக்கழக ஊழியர்களின் வழிகாட்டுதலின் கீழ் நடைமுறை ஆய்வுகள் நடைபெறுகின்றன: எல்லா மாணவர்களும் நகர ஆராய்ச்சிக் கழகங்களில் நடைமுறைப் பயிற்சி பெறுகின்றனர். இப்பாடசாலையில், 8,9,10வது (பட்டமேற்ற) வகுப்புகளே உள்ளன.

''இப்பாடசாலையில் பிரவேசிக்க ஒருவர் மூன்றுச் சுற்றுப் போட்டியில் வெல்லவேண்டும். மூன்ருவது, இறுதிச் சுற்று அகாடெம் கோரோதொக்கில் நடைபெறுகிறது. கோடைக்கால முகாமின் மூன்று வார காலப் படிப்பின் பின் இது நிகழ்கிறது; இங்கு மாணவர்கள் தலைசிறந்த விஞ்ஞானிகளின் விரிவுரையைக் கேட்கின்றனர், சிக்கலான பிரச்னைகளைத்

தீர்ப்பதில் பயிற்சி பெறுகின்றனர், விஞ்ஞான வட்டங்களின் பணியிலும் நீச்சல் மற்றும் சூரிய ஸ்நானத்திலும் பங்கு கொள்கின்றனர். சகல செலவுகளுக்கும் அரசே நிதியிடுகிறது பதினொரு ஆண்டுகளில் சுமார் 2,120 இளம் மாணவர்கள் இப்பள்ளியில் தமது படிப்பை முடித்துக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டிலும் பாடசாலையிலிருந்து வெளியேறும் ஐந்தில் நான்குபேர் நொவோஸிபிர்ஸ்க் பல்கலைக் கழகத்திற்கும், ஏனையோர் பிற சோவியத் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் செல்கின்றனர்.

தற்போது பாடசாலையின் தேசிய, சமூக சேர்க்கை என்ன?

''ருஷ்யன், உக்ரேனியன், புரியாத், தாத்தார், உஷ்பெக், காக்காஸி, யூதர், அடிகெய்ஸ் போன்ற 21 தேசிய இனங்களின் 578 குழந்தைகள் இதில் அடங்குவர், இவர்களில் தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகளின் 254, ஊழியர்களின் 162, தொழில்நுட்பவியலாளர்கள், இயந்திரவியலாளர்களில்105, ஓய்வுபெற்றவர்களின் 105, விஞ்ஞானிகளின் 3 குழந்தைகளும் அனாதைகள் 9பேரும் அடங்குவர்.

''சில வேளைகளில் டாக்டர் போர்லே கூறலாம்; ''பாருங்கள், இந்த விசேடப் பள்ளியில் சில விஞ்ஞானிகளின் குழந்தைகளை மாத்திரம் சேர்க்கிறார்கள்!'' ஆனால், அத்தகைய பாடசாலைகளுக்குக் குழந்தைகளைச் சேர்க்கையில் மாணவர்களின் சமூக அந்தஸ்தாலோ அல்லது பெற்றோர்களின் ''இலட்சியங்''களாலோ வழிகாட்டப்படுவதில்லை. எமது ஒட்டுமொத்த வரைவிலக்கணம் குழந்தைகளின் திறமையேயாகும். ஒரு மிகச் சிறந்த இளைஞருக்கு ஆரம்பத்திலேயே பயனுள்ள கல்வியும் பயிற்சியும். சமுதாயத்துக்குப் பெரும் பயன் தருவதாகும்

''இப்போட்டிகளில் எந்த மாணவரும் பங்கெடுக்கலாம். இவை நாடு முழுவதிலும் மக்கள் மத்தியில் அறிவை விரிவாகத் தேடுவதற்கான ஒரு ஜனநாயக முறையாகும். நகரங்களிலும் பின்தங்கிய சைபீரியக் கிராமங்களிலும் பல தலைசிறந்த இளைஞர்

களை நாம் கண்டுள்ளோம். உதாரணமாக, இவர்கள் 7வது படிவத்தில் தாமே சொந்தமாக உயர் கணிதங்களைக் கற்றனர்.''

> ''வளமான தொழிலகங்களும் தொழிற்சங்கங்களும் பல விடுமுறை இல்லங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ளன. இதில் செலவே கிடையாதெனலாம். ஆனால், தொழிலாளி எப்போது, எங்கே தனது விடுமுறையைக் கழிக்கவேண்டும் என்பதை ஸ்தாபனமே தீர்மானிக்கிறது.''
>
> **மைக்கல் ஜங்பிலட்,**
> டை செயிட்,
> டிசம்பர் 12, 1975
> ஜெ. ச. கு.

விடுமுறைக் காலம் நிர்வாகத்தால் மாத்திரமன்றி, தொழிற்சங்கக் குழு மற்றும் நிர்வாகத்தாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. ஆண்டின் தொடக்கத்தில் ஆளணிகளிடம் வாக்கெடுக்கப்பட்டு விடுமுறை நிர்ணயிக்கப்படுகிறது.

''எங்கே'' செல்வது என்பதில் தொழிற்சங்கம் ஒருவழியில் சம்பந்தப்பட்டுள்ளது; ஏனெனில், ஆளணிகள் விடுமுறை இல்ல வசதிக்காக விண்ணப்பிக்கையில் சங்கமானது இடங்கள் மற்றும் காலம் பற்றி அறிவிக்கிறது.

ஆயினும், ''எவ்வாறு'' செலவிடப்படுகிறது என்பதைத் தீர்மானிப்பதில் தொழிற்சங்கத்திற்கோ நிர்வாகத்திற்கோ எதுவும் கிடையாது. நீந்துவது, சதுரங்கம் விளையாடுவது உட்பட நீங்கள் விரும்பியதைச் செய்யலாம்.

> 1977 ஆரம்பத்தில் பாரிஸ் லே மொண்டே அறிவித்ததாவது: (1) வழமையான இராமப்புற கிணிமணிகளை வாங்குவது உக்ரைனில் தடை செய்யப்பட்டுள்ளது; (2) உக்ரேனிய இலக்கியங்களும் கவி தாராசெங் சென்கோவின் நூல்களும்

தடைசெய்யப்பட்டுள்ளன, (3) ஆறு உக்ரேனிய இலக்கியப் பத்திரிகைகள் உக்ரைனிய மொழியிலன்றி ருஷ்யனில் வெளிவருகிறது.

1. 1976ல் கியேவின் மத்திய உக்ரைனிய நினைவுச்சின்னக் கடை 6,000ரூபிள் பெறுமதியான பாரம்பர்ய அணிமணிகளை விற்றது 1977 அல்லது 1978ல் இவ்விற்பனை நிற்கவும் இல்லை.

2. சோவியத் பதிப்பகங்கள் தாரா செவ்செங்கோவின் நூல்களை 245 வெவ்வேறு பதிப்புகளில் மொத்தம் 13,500,000பிரதிகளில் அச்சிட்டுள்ளன. 1977 தொடக்கத்தில் ஜெர்மன் கோதே கலைக்களஞ்சியம் அல்லது பிரிட்டிஷ் ஷேக்ஸ்பியர் கலைக்களஞ்சியம் போன்றதையொத்த செவ்சென்கோவின் தொகுதியை வெளியிட்டது.

3. விஸ்யெஸ்விட் உட்பட ஆறு உக்ரைனிய இலக்கிய சஞ்சிகைகள் வெளிநாட்டு நூலாசிரியர்களின் மொழிபெயர்ப்புகளைத் தாங்கி உக்ரைனிய மொழியில் வெளிவருகின்றன. இவை முன்னரைப் போலவே, இப்பிரச்னையை லே மொண்டே கிளப்பிய வேளையிலும். தமது ஜனவரி மாத இதழ்களை விற்பனைக்கு விட்டிருந்தன.

> ''விடுதலைக்கான முன்னணிப் படையில், கம்யூனிஸ்ட் கட்சியில், மொத்த உறுப்பினர்களில் 3. 5.சதவீதமே பெண்கள் உள்ளனர்.''
>
> சிதுயெத்ஸ்தே செய்துங்;
> 21, மார்ச் 1975
> ஜெ.ச.கு.

''எமது கட்சி உறுப்பினர்களில் ஏறத்தாழ கால்வாசிப்பேர் பெண்களாவர் (சோ. க. க.வின் 25வது காங்கிரஸுக்கான கணக்காய்வுக் குழுவின் அறிக்கையிலிருந்து).

> ''சோவியத் ஒன்றியத்தில் பெரும்பாலான பெண்கள் இரண்டாந்தர விசேடக் கல்வியைப் பெற்றுள்ளனர் அதே சமயம் ஆண்கள் உயர் கல்வியை மாத்திரமே பெற்றுள்ளனர்''
>
> மாரியனு புந்தென்ஸ்கே,
> டை செய்ட்
> பெப்ருவரி 21, 1975
> ஜெ. ச. கு

சோவியத் ஒன்றியத்தில் ஆண்களைவிட அதிகமான பெண்களே உயர்தர அல்லது இரண்டாந்தர விசேடக்கல்வியைப்பெற்றுள்ளனர். புள்ளிவிபரம் வருமாறு: உயர்கல்வி பெற்ற பெண்கள்4,962,000 இரண்டாந்தரவிசேடக் கல்வியைப்பெற்றபெண்கள் 8. 449,000 அல்லது மொத்தத்தில் 59 சதவீதம் மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கையில் 70சதவீதமும் மொத்த ஆசிரியர்களின் எண் ணிக்கையில் 71சதவீதமும் பெண்களாவர். நீதிமன்றத்தில் மக்கள் நீதிபதிகளில் 32.7 சதவீதமும், மக்கள் மதியுரையாளர்களில் 50. 7சதவீதமும் பெண்களே

> பாரிசைச் சேர்ந்த ''லே நேர வேல் ஒப்சர்வேச்சர்'' ருஷ்யாவில் இழிபொருள் இலக்கியமும் விபசாரமும் இல்லையென துன்பமடைகிறது; பல சோவியத் மக்கள் ''வேறுவிதமாக விரும்பினாலும்'' ஆட்சியின் எதேச் சாதிகாரம் மற்றும் தூய்மை இயல்பு காரணமாக இது இவ்வாறு இருக்கலாம்.

சோவியத் மக்களின் சமூக, தார்மீக சாதனைகளால் அல்லாமல் ''எதேச்சாதிகார ஆட்சி''யினாலேயே சோவியத் ஒன்றியத்தில் விபசாரம் இல்லாமல் இருக்கிறது என்று கோருவதானது, உண்மையிலேயே எதேச்சாதிகார ஆட்சியாகத் திகழ்ந்த ஜாரிஸ் ருஷ்யாவில் விபசாரம் எவ்வாறு

நிலவிற்று என்பதை விளக்குவதில் ஒரு வரைத் திகைக்கச் செய்கிறது. அல்லது பாட்டிஸ் டாவின் ஆட்சியின் கீழ் கியூபாவை எடுத்துக் கொள் ளுங்கள். விபசாரம் அப்போது செழுமையடைந் திருந்தது. சர்வாதிகாரி தூக்கி வீசப்பட்டதன் பின்னரே மறைந்தொழிந்தது. இன்றும் கூட கடந்த காலத்தில் போலவே இந்த சமூக நோய் எதேச் சாதிகார ஆட்சிகளாலும் பூர்ஷுவா ஜனநாயக ஆட்சிகளாலும் சகித்துக் கொள்ளப்படுகின்றன.

லே நொவேலே ஒப்சர் வேச்சரின் அருவருக்கத் தக்க வாதம் தொடர்பாக நாம் கேட்போமாக: சஞ்சிகை ஆசிரியர்கள், வெளியீட்டாளர்களைத் திருப்தி செய்வதற்காகவும், எதேச்சாதிகாரம் இல் லாமல் இருக்கும் மதிப்பைப் பெறுவதற்காகவும் சோவியத் ஒன்றியம் விபசாரத்தையும் இழிதொழி லையும் பெறவேண்டுமா?

அச்சிட்டோர்:
பிரகதி அச்சகம்,
93, மாளிகாகந்த ரோட்,
கொழும்பு-10.